பக்கங்கள்: 12
விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 புரட்டாதி 25 ஞாயிற்றுக்கிழமை 11.10.2020 கதிர் 336

இது ரகசியம் அல்ல!

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பில் உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவிக்கும் போதுதான் அது பகிரங்க ஆவணமாகும். பக்கம்02

20 ஆவது திருத்தம் தொடர்பான தீர்ப்புக் கசிந்தது

## ஜனாதிபதிக்கு சட்டவிலக்கு அளிக்க முட்டுக்கட்டை போட்டது நீதிமன்றம்!

நாடாளுமன்றைக் கலைக்கும் அதிகாரமும் இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர்தான்

தேர்தல் ஆணையத்தைக் கட்டுப்படுத்தவும் தடை

கொழும்பு,ஒக். 10

உத்தேச இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தின் 3, 5, 14, 22 ஆம் பிரிவுகள் தற்போதைய அரசமைப்பின் பிரதான சரத்துக்களை மீறுகின்றமையால் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறாமல் அவற்றை அரசமைப்புத் திருத்தமாக நடைமுறைக்குக் கொண்டு வர முடியாது என உயர்நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

எனினும், அந்தப் பிரிவுகளில் உரிய மாற்றம் செய்து கொண்டு ஏனையவற்றையும் சேர்த்து நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவுடன் இருபதாவது திருத்தத்தை நிறைவேற்றி நடைமுறைக்குக் கொண்டு வரலாம் என்றும் உயர்நீதிமன்றம் தீர்மானித் திருக்கின்றது.

தேர்தல்கள் பக்கம் 02

## சுற்றுலாவுக்கு தடை வரலாம்

சுகாதாரத்துறை எச்சரிக்கை

அடுத்த வாரம் இலங்கைக்கு மிகவும் தீர்க்கமான தருணமாக அமையப் போகின்றது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவும் நிலைமை தொடர்பாக சுகாதாரத்துறையின் முக்கிய அறிக்கை அடுத்த வாரம் வெளியாகவுள்ளது.

இந்த அறிக்கையின் பரிந்துரைக்கு பக்கம் 02

# எகிறும் சமூகத் தொற்று; மக்கள் மத்தியில் பதற்றம்

## கொரோனாவின் மூன்றாம் அலைக்கு 1,188 பேர் இலக்கு

**கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடைக்கு வெளியே தொடர்ந்தும் கொரோனாத் தொற்றாளர்கள் பலர் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றனர். இதனால் பொதுமக்கள் மத்தியில் பதற்றமான சூழல் உருவாகி வருகின்றது.**

**மாரவிலவைச் சேர்ந்த மீனவர் ஒருவர் காய்ச்சலுடன் நேற்று ராகம மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, அவர் கடலுக்குப் புறப்பட்டுச் சென்ற டிகோவிட்ட துறைமுகம் மூடப்பட்டுள்ளது எனச் சுகாதார அதிகாரிகள் அறிவித்துள்ளனர். அத்துடன் அவருடன் படகில் சென்ற ஏனைய 5 மீனவர்கள் மற்றும் குடும்பத்தினரைத் தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.** பக்கம் 02

## கட்டுநாயக்க ஆடைத்தொழிற்சாலையில் மேலும் 11 பேருக்கு கொரோனா தொற்று

கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திலுள்ள 'நெக்ஸ்' ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றிய ஊழியர்களில் மேலும் 11 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

குறித்த ஆடைத்தொழிற்சாலையில் நேற்றுமுன்தினம் ஊழியர் ஒருவர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டதன் பின்னர், தொழிற்சாலை உடனடியாக மூடப்பட்டதுடன் அங்கு பணியாற்றிய ஊழியர்கள் பக்கம் 02

## மன்னாரில் மேலும் ஐவருக்குக் கொரோனா!

(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த வியாழக்கிழமை ஒரு கொரோனா நோயாளி அடையாளம் காணப்பட்ட நிலையில் நேற்று மேலும் ஐவருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மன்னார் ஆயர் இல்லத்தில் கட்டடப் பணியில் ஈடுபட்டிருந்த வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டமையைத் தொடர்ந்து அவருடன் பணியாற்றியவர்கள் உள்ளிட்ட மன்னார் ஆயர் இல்லத்தைச் சேர்ந்த 150 பேர் உடனடியாகவே தனிமைப்படுத்தப்பட்டனர்.

இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்குப் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனடிப்படையில் நேற்று முன்தினம் காலையில் 42 பேரிடமும், மாலையில் 51 பேரிடமும் இருந்து மாதிரிகள் பெறப்பட்டு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டன.

93 பேரிடம் பெறப்பட்ட மாதிரிகளில் 27 பேரின் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகின. இதில் வென்னப்புவ பகுதியைச் சேர்ந்த 5 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எஞ்சிய மாதிரிகளின் பரிசோதனை முடிவுகள் இன்றும் நாளையும் வெளியாகும் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

## ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர்கள் சுய தனிமையில்

கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விடுதிகளில் உள்ள முகாமைத்துவ பீட மாணவர்களைச் சுய தனிமைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகத்துக்கு விடுமுறை வழங்கப்பட்டதனால் தற்போது விடுதிகளில் உள்ள முகாமைத்துவ பீட மாணவர்கள் 50 பேர் மட்டுமே சுய தனிமைப் படுத்தப்படுவார்கள் எனப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கூறியுள்ளார்.

குறித்த பல்கலைக்கழகத்தில் கல்வி பக்கம் 02

யாழ். இணுவிலைச் சேர்ந்த

## களனி பல்கலைக்கழக மாணவி திடீர் மரணம்!

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த களனிப் பல்கலைக்கழக மாணவி ஒருவர் நேற்று திடீரென உயிரிழந்துள்ள துயரம் கொழும்பு வெள்ளவத்தையில் இடம்பெற்றுள்ளது.

இலங்கையில் கொரோனா பீதி உச்சமடைந்துள்ள இந்தத் தருணத்தில் குறித்த மாணவி திடீரெனச் சுகயீனமுற்று உயிரிழந்துள்ளார்.

அவரது பக்கம் 02

## 119 கொரோனா நோயாளிகள் தலைமறைவு; கம்பஹாவில் தொடர்கிறது தேடுதல் வேட்டை

கம்பஹா மாவட்டம், மினுவாங்கொடை பிரண்டிக்ஸ் ஆடைத்தொழிற்சாலை கொரோனா கொத்தணியில் தொற்றுக்குள்ளானவர்கள் என உறுதி செய்யப்பட்ட 119 பேரைத் தேடுகின்றோம் என்று கம்பஹா மாவட்ட செயலாளர் சுனில் ஜயலத் நேற்று தெரிவித்தார்.


மாவட்டத்தில் தொற்றுக்குள்ளானவர்களைத் தேடுவதில் பாதுகாப்புத் தரப்புடன் இணைந்து செயற்படுகின்றோம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் வழங்கிய முகவரிகள் தொடர்பிலும் சந்தேகம் எழுந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கம்பஹா மாவட்டத்தில் நேற்று வரை 5 ஆயிரத்து 357 பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் எனவும் அவர் கூறினார்.

கொரோனாத் தொற்றுடன் உறுதி செய்யப்பட்டவர்களின் பரிசோதனை அறிக்கைகள் தம்மிடம் உள்ளன எனவும், அதில் 119 பேரைக் கண்டறிய வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## விக்கியைக் குடைந்த சி.ஐ.டியினர்



பௌத்த பிக்கு ஒருவர் பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கொடுத்த முறைப்பாடு ஒன்றையடுத்து கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பக்கம் 02

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆனால் அதற்கு முன்னர் நேற்றே அதனை நாம் அம்பலப்படுத்தி விட்டோம். அதனால் அரசியல், சட்ட நெருக்கடிகள் நேரலாம்.

இதனை எண்ணும் போது எனக்கு பழைய நினைவுகள் – 38 ஆண்டுகளுக்கு முன்னைய விடயங்கள் – ஞாபகத்துக்கு வருகின்றன. அப்போதும் நீதிமன்றச் செய்தியாளராக இப்படி ஒரு செய்தியை முற்கூட்டியே வெளியிட்டு சிக்கிக் கொண்டு அவஸ்தைப்பட்ட அனுபவம் எனக்குண்டு.

அது 1982 ஒகஸ்டில் நடந்தது. கொழும்பில் 'தினபதி', 'சிந்தாமணி' பத்திரிகைகளின் நீதிமன்றச் செய்தியாளன் நான். 22 வயது. மூன்று வருடப் பத்திரிகை அனுபவம். சட்டக் கல்லூரியின் இரண்டாம் ஆண்டு மாணவன்.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா தமது முதலாவது பதவிக் காலத்தில் நான்காம் ஆண்டு நிறையும் போது அடுத்த ஜனாதிபதித் தேர்தலை முற்கூட்டியே நடத்தத் திட்டமிட்டார். அதற்கேற்ப அரசமைப்பை மாற்ற வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டது. அரசமைப்புக்கான மூன்றாவது திருத்தம் கொண்டு வரப்பட்டது. அது பற்றிய உயர்நீதிமன்ற விசாரணையை அப்போதைய ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் முரண்பட்டிருந்த பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன் தாம் நடத்த விரும்பவில்லை. அதனால் தமக்கு அடுத்த சிரேஷ்ட நிலையில் இருந்த நீதியரசர் எஸ்.சர்வானந்தா (பின்னர் பிரதம நீதியரசரானவர்) தலைமையில் ஏழு நீதியரசர் ஆயத்திடம் ஒப்படைத்தார். விசாரணை நடந்தது. செய்தி சேகரித்தோம்.

விசாரணை முடிவுற்று இரண்டாம் நாள் என நினைவு. நீதியரசர் சர்வானந்தாவின் உதவியாளரான டைப்பிஸ்ட் நண்பரைச் சந்தித்தேன். அந்தக் காலத்தில் கணினி இல்லை. தட்டச்சு இயந்திரம்தான் கதி. ஒவ்வொரு பக்கமும் ஏழெட்டுப் பிரதி எடுக்கவேண்டியிருந்தமையால் எப்போதுமே புது 'காபன்' தாளைப் பயன்படுத்துவார்கள். நீதியரசர் சர்வானந்தா தமது 'சேம்பரில்' இல்லாத சமயத்தில் என் நண்பரை சேம்பருக்கு வெளிப்புற அறையில் இருந்த தட்டச்சு மேசையில் சந்தித்தேன். நண்பர் ஏதோ தேவையாக சேம்பருக்குள் போக நான் அவரின் மேசைக் கோவையில் அடுக்கப்பட்டிருந்த மூன்று, நான்கு காபன் தாள்களைச் சுட்டு என் டயறிக்குள் அமுக்கிக் கொண்டேன்.

என் அலுவலகத்துக்குள் வந்து காபன் தாள்களை நோட்டமிட்டேன். எனக்கு அதிர்ஷ்டம் அடித்திருந்தது. நீதியரசர் சர்வானந்தாவின் தீர்ப்பின் இறுதித்தாள் தட்டச்சு செய்யப் பயன்படுத்திய காபன் தாள் அது. தீர்ப்பை முழுதாக அறிய அது போதுமானதாக இருந்தது. எங்கள் துணை ஆசிரியர் கே.கே.இரத்தினசிங்கமும், செய்தியாசிரியர் கானமயில்நாதனும், அதனைப் பொக்கிஷமாக வைத்துச் செய்தியை வடிவமைத்தனர்.

*"ஜனாதிபதி விருப்பப்படி நேரத்துடன் தேர்தலை நடத்தலாம். உயர்நீதிமன்று 4 – 3 ஆகப் பிரிந்து தீர்ப்பு"* என்று தலைப்புச் செய்தி. தலைப்புச் செய்தியில் என் பெயரும் முக்கியத்துவம் கொடுத்துப் பிரசுரமானது. (அந்தப் பத்திரிகையை பெரும் பொக்கிஷமாக இப்போதும் காபந்து பண்ணி வைத்துள்ளேன்)

அதுவல்ல விடயம். அடுத்த நாள் காலையில் நேரத்துடன் அலுவலகம் போனேன். சீனியர் செய்தியாளர்கள் எல்லோருக்கும் என் மீது எரிச்சல். இளைய வயதில் நாட்டையே கலக்கும் செய்தியை முற்கூட்டியே வெளியிட்டு விட்டானே இந்தப் பொடியன் என்ற அவர்களின் கருத்து முகத்தில் தெரிந்தது.

அப்போதுதான் நாடாளுமன்றச் செய்தியாளரின் தகவல் வந்தது. உயர்நீதிமன்றத் தீர்ப்பை சட்டத்துக்கு முரணாக முற்கூட்டியே வெளியிட்ட தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரையும், செய்தியாளரையும் நாடாளுமன்றுக்கு அழைத்து, நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறியமைக்காக, விசாரணை நடத்த வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் சரத் முத்தெட்டுவேக உரிமைப் பிரச்சினை கிளப்பியிருக்கின்றார் என்றார்கள். நான் நடுங்கிப் போனேன். சீனியர் செய்தியாளர்கள் வேறு அவ்வப்போது கொமண்ட் அடித்து எனக்குப் பேதி கொடுத்தார்கள். பிரதம ஆசிரியர் எஸ்.டி.சிவநாயகம் தனது அலுவலக அறைக்கு அழைத்துத் தெம்பூட்டினார். இதெல்லாம் சகஜம், எதிர்கொள்ளலாம், பயப்படாதீர்கள் என்றார்.

நேரம் மெல்ல நகர்ந்தது. நிமிடங்கள் நரக தேவனையாகக் கடந்தன. சட்டக் கல்லூரி விரிவுரைக்கும் நான் போகவில்லை. ஒருவாறு மாலையாயிற்று. அடுத்த நாள் பிராந்தியப் பதிப்புக்கான முன்பக்கம் 'புறூவ்' வந்தது. செய்தி ஆசிரியர் கானமயில்நாதனின் மேசைக்கு மெல்லப் போய் எட்டிப்பார்த்தேன்.

முன்பகத்தில் உச்சத்தில் *'தினபதியின் செய்திக்கு சரத்தின் ஆட்சேபனையும் பிரதமரின் பதிலும்'* என்று சரத் முத்தெட்டுவேகமவின் படமும் பிரதமர் பிரேமதாஸாவின் படமும் சேர்ந்து செய்தி பிரசுரமாகியிருந்தது. நான் வேலை செய்த 'தினபதி' நிறுவனம் பிரதமருக்கு மிக நெருக்கமானது. அந்த நிறுவனத்துக்குள்ளேயே பிரதமரை இரண்டொரு தடவைகள் நான் நேரில் கண்டுள்ளேன். எங்கள் நிறுவனத்தில் இருந்து நூறு யார் தொலைவில்தான் அவரது வாழைத்தோட்ட வீடு – சுசரித்த மாவத்தையில் – இருந்தது.

அன்று நாடாளுமன்ற உரையில் சரத் முத்தெட்டுவேகமவுக்கு பிரதமர் நல்ல பதிலடி கொடுத்திருந்தார். நாங்கள் வெளியிட்ட செய்திக்காக என் பெயர் குறிப்பிட்டு அவர் பாராட்டினார் என்றும் நினைவு.

*"இத்தகைய செய்தியை வெளியிடுவதற்கு தந்திரம் மிக்க செய்தியாளர் வேண்டும். சரத் முத்தெட்டுவேகமவின் கம்யூனிஸ்ட் கட்சி பத்திரிகையான 'அத்த'வில் அத்தகைய செய்தியாளர்கள் இல்லை என்பதற்காக 'தினபதி' செய்தியாளரை நாங்கள் நோவதா?"* – என்று கேட்டிருந்தார் பிரதமர் பிரேமதாஸா.

கைத் தொலைபேசி, வட்ஸ் – அப், வைபர் இல்லாத அந்தக் காலத்தில் – ஏன் போட்டோ கொப்பியே சரியாக வராத அந்தச் சமயத்தில் – அப்படி சாதனை நிகழ்த்தியமை அரிய விடயம்தான். அது என் திறமையல்ல. நான் செய்த களவுக்கு – காபனைத் திருடிய நடவடிக்கைக்கு – கிடைத்த அதிர்ஷ்டம். அவ்வளவுதான்.

இப்போதும் அப்படி ஒரு சர்ச்சை நாடாளுமன்றத்தில் கிளம்புமோ என்னவோ...? ஆனால் அன்றைய மாதிரி நான் கற்றுக் குட்டியல்லன், இன்று அப்படிப் பயந்து நடுங்குவதற்கு...!

– மின்னல் –

## விக்கியைக் குடைந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சி.ஐ.டி. அதிகாரிகள் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நீதியரசர் சி.வீவிக்கினேஸ்வரனிடம் நேற்று மாலை விசாரணைகளை நடத்தியுள்ளார்கள்.

சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற இந்த விசாரணையில் விக்கினேஸ்வரன் வெளியிட்ட அறிக்கை ஒன்று தொடர்பாக சி.ஐ.டி.யினர் குடைந்தெடுத்து விசாரணைகளை முன்னெடுத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலுக்குச் சில தினங்களுக்கு முன்னதாக நடத்தப்பட்ட விசாரணைகளின் தொடர்ச்சியாகவே இன்றைய விசாரணைகள் இடம்பெற்றன என விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்களே இலங்கையின் மூத்த குடிகள் என்ற கருத்தில், 2019 நவம்பர் 14 ஆம் திகதி கேள்வி – பதில் அறிக்கை ஒன்றை விக்கினேஸ்வரன் வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கை இன நல்லுறவைக் கெடுப்பதாக இருக்கின்றது எனவும், சமாதானத்துக்குப் பங்கம் ஏற்படுத்துகின்றது எனவும் பௌத்த பிக்கு ஒருவர், செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த விசாரணை இடம்பெற்றது எனவும் விக்கினேஸ்வரன் கூறினார்.

இது தொடர்பில் சி.ஐ.டி. அதிகாரிகளால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த விக்கினேஸ்வரன், தன்னுடைய கருத்தில் தான் உறுதியாக இருக்கிறார் எனவும், உண்மையான தகவல் ஒன்றைச் சொல்வதன் மூலம் இன நல்லறவு பாதிக்கப்படும் என்றோ, சமாதானத்தை அது பங்கப்படுத்தும் என்றோ நான் நினைக்கவில்லை எனவும் தெரிவித்தார். இது உண்மையில்லை என்றால் நீங்கள் உங்களுடைய கருத்துக்களை வெளிப்படுத்துங்கள். அதற்குப் பதிலளிக்க நான் தயாராக இருக்கின்றேன் எனவும் அவர்களிடம் விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

சுமார் ஒன்றரை மணி நேரம் விக்கினேஸ்வரனிடம் விசாரணை நடத்தப்பட்டதுடன், அவரது சாட்சியம் முழுமையாகப் பதிவு செய்யப்பட்டு இறுதியில் அதில் அவரது கையொப்பமும் பெறப்பட்டது.

## களனி பல்கலைக்கழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திடீர் உயிரிழப்புக்குக் கொரோனாத் தொற்று காரணமாக என்ற பதற்றம் ஏற்பட்டுள்ளது.

கொழும்பு, வெள்ளவத்தையில் வசித்து வந்த யாழ். இணுவிலைச் சேர்ந்த களனி பல்கலைக்கழகத்தின் முதலாம் வருட மாணவி செல்வி யதீசா ஸ்ரீதர் (வயது – 20) என்பவரே திடீர்சுகயீனமுற்று உயிரிழந்துள்ளார்.

அவரின் மாதிரிகள் பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

## சுற்றுலாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைய சில வேளை, நாடு முழுவதும் சுற்றுலா தடை விதிக்கப்படலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் டாக்டர் நவீன் டி சொய்சா தெரிவித்தார்.

அதேபோல் மேலும் பல முக்கிய தீர்மானங்களை அரசு அடுத்த வாரம் எடுக்கும் எனவும் அவர் மேலும் கூறினார்.

## ஜயவர்தனபுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பயிலும் முகாமைத்துவ பீட மாணவி ஒருவர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, முகாமைத்துவ பீட மாணவர்கள் மற்றும் அவர்களுடன் தொடர்புகளைப் பேணியவர்களிடத்திலும் பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

## கட்டுநாயக்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனிமைப்படுத்தப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

குறித்த பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் நேற்று வெளியாகியுள்ள நிலையிலேயே அதில் 11 பேருக்குக் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

## எகிறும் சமூகத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாணந்துறை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டிருந்த பெண் ஒருவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தாதி ஒருவரின் மகளான குறித்த பெண் காய்ச்சலுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையிலேயே அவருக்குத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இவருக்குக் கம்பஹாவில் உள்ள நண்பி மூலம் தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகின்றது. இதையடுத்து. பாணந்துறை மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

அங்கு பணியாற்றிய மருத்துவர்கள் மற்றும் தாதிகள் உள்ளிட்ட 15 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. கொக்கல பிரதேசத்திலுள்ள தனிமைப்படுத்தல் நிலையங்களில் தங்க வைக்கப்பட்டிருக்கும் இரண்டரை வயதுடைய குழந்தையொன்றுக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் பணிபுரியும் 27 வயதுடைய பெண் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே இன்று நடைபெறவுள்ள தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இரண்டு மாணவர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது. அத்துடன் வேறு மூன்று மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மாணவர்கள் ஐவருக்கும், ஐ.டி.எச். வைத்தியசாலை வளாகத்தில் பரீட்சையில் தோற்றுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளன என்று பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் நேற்று மட்டும் 105 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதன் மூலம் கொரோனாவின் மூன்றாம் அலையில் சிக்கிய தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கையானது 1,188 ஆக உயர்வடைந்துள்ளது.

நேற்று வரை நாட்டில் பதிவான மொத்தக் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையானது 4 ஆயிரத்து 628 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன் குணமடைந்தவர்களின் தொகையும் 3 ஆயிரத்து 306 ஆக உயர்ந்துள்ளது. 1,307 கொரோனாத் தொற்றாளர்கள் நாடு முழுவதும் உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

## ஜனாதிபதிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொடர்பான ஜனாதிபதியின் அதிகாரங்கள் பற்றிய பிரிவு, ஜனாதிபதிக்கு சட்ட விலக்களிப்பு வழங்கும் சரத்து, நாடாளுமன்றக் கலைப்புக்கான ஜனாதிபதியின் அதிகாரம், தேர்தல் ஆணையத்தின் அதிகாரம் ஆகியவை தொடர்பி லேயே சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக் கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற உத்தரவை உயர்நீதிமன்றம் வழங்கியிருக்கின்றது.

அரசமைப்பின் இருபதாவது திருத்தம் தொடர்பாக ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்றம் கடந்த வாரம் வரை விசாரணை நடத்தியிருந்தது. இந்த இருபதாவது திருத்தத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 39 மனுதாரர்களின் சமர்ப்பணங்களை செவிமடுத்த நீதியரசர்கள், தமது முடிவை சபாநாயகருக்கும், ஜனாதிபதிக்கும் நேற்று காலையில் அனுப்பி வைத்த நிலையில் அது வெளியில் கசிந்துள்ளது.

அடுத்த, நாடாளுமன்ற அமர்வில் சபாநாயகர் அந்தத் தீர்ப்பை சபையில் அறிவிக்கும்போதே அது பொது ஆவணமாகும். எனினும் அதற்கு முன்னர் இன்றே அதன் விவரம் ஊடக மட்டங்களுக்குக் கசிந்துள்ளது.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் புவனேக அலுவிகாரை, சிசர டி ஆப்ரூ, விஜித் கே.மலலகொட ஆகிய நால்வரும் ஒரே தீர்ப்பைச் சேர்ந்து வழங்கியுள்ளனர்.

நீதியரசர் பிரியந்த ஜயவர்த்தனா மட்டும் தேர்தல்கள் தொடர்பான ஜனாதிபதியின் கடமைகள், நாடாளுமன்றக் கலைப்புக்கான ஜனாதிபதியின் அதிகாரங்கள் தொடர்பான விடயங்களிலும், பிற அம்சங்களிலும் ஏனைய நான்கு நீதியரசர்கள் வழங்கிய தீர்ப்புக்குத் தாமும் இணங்குகின்றார் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், ஜனாதிபதிக்கு சட்ட விலக் களிப்பு வழங்குதல் மற்றும் தேர்தல் ஆணையத்தின் விசேட அதிகாரங்களை மட்டுப்படுத்துதல் போன்றவற்றைச் செய்வதாயின் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தி மக்கள் ஆணை பெறவேண்டும் என்று ஏனைய நீதியரசர்கள் வழங்கிய முடிவு குறித்து அவர் எதுவும் தெரிவிக்காமல் விட்டுள்ளார்.

தற்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி பின்வரும் சரத்தைகளை நிறைவேற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் அனுமதியுடன் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும்:–

<u>சரத்து 03</u>

அரசமைப்பின் இருபதாவது திருத்தத்தின் சரத்து 03 ஜனாதிபதியின் கடமைகள், பொறுப்புகள் பற்றிப் பேசுகின்றது.

அதிலே, தேர்தல் ஒன்றை சுயாதீனமான முறையில் நடத்துவதற்கான சூழலையும் நிபந்தனையையும் பேணுமாறு தேர்தல் ஆணையம் கோரினால் அதை ஜனாதிபதி நிறைவேற்ற வேண்டும் என்ற பழைய ஏற்பாடு நீக்கப்படுவதாக இருந்தது. அதைச் செய்வதாயின் – அந்த ஏற்பாட்டை நீக்குவதாயின் – சர்வஜன வாக்கெடுப்பில் மக்கள் அனுமதி பெறுவது அவசியம் என்று நீதிமன்றம் தீர்ப்பளித் துள்ளது.

<u>சரத்து 05</u>

ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தொடர முடியாது, அவருக்குப் பதவிக் காலம் முழுவதும் சட்ட விலக்களிப்பு உள் ளது என்பது முன்னைய மூல ஏற்பாடு.

அவருக்கு எதிராக அரசமைப்பின் 126 பிரிவின் கீழ் அடிப்படை உரிமைமீறல் வழக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட முடியும் என்பது 19ஆவது திருத்தம் மூலம் கொண்டுவரப்பட்டது. அதை நீக்குவதையே இருபதாவது திருத்தத்தின் 5ஆவது சரத்து பிரேரித்தது. ஆனால் அதைச் செய்வதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என இப்போது உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

<u>சரத்து 14</u>


நாடாளுமன்றம் ஒன்றை அதன் பதவிக் காலம் ஆரம்பித்து நான்கரை வருடங்களுக்கு முன்னர் ஜனாதிபதி கலைக்க முடியாது என்பது 19ஆவது திருத்த ஏற்பாடாகும். இதனை ஒரு வருடமாகக் குறைக்கும் திருத்தத்தை இருபதாவது திருத்தத்தின் 14ஆம் பிரிவு பிரேரித்தது. அதனை ஏற்க உயர்நீதிமன்று இப்போது மறுத்துவிட்டது.

தேவையாயின் இந்தக் கால எல்லையை

பக்கம் 11 ›››

# ஜெனிவா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்குக் கைகொடுக்கும் சீனா!

## கோட்டாவிடம் யாங் ஜியேச்சி குழுவினர் நேரில் தெரிவிப்பு





*கொழும்பு, ஒக்.11*

*ஐ.நா. மனித உரிமைகள் சபை உள்ளிட்ட சர்வதேச அரங்கில் இலங்கை எதிர் நோக்கக்கூடிய நெருக்கடி நிலைமைகளின்போது சீனா இலங்கைக்குத் தொடர்ந்தும் கைகொடுத்து உதவும் என்று கொழும்பு வந்த சீன தூதுக்குழுவினர் தெரிவித்துள்ளனர்.*



இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள சீன கம்யூனிசக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினர் யாங் ஜியேச்சி தலைமையிலான சீனத் தூதுக் குழுவினர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

இரு நாட்டு நட்புறவு, இலங்கையில் முன்னெடுக்கப் படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள், கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தின் அடுத்தகட்ட நகர்வுகள், தேசிய அரசியல் விவகாரங்கள் மற்றும் சர்வதேச அரங்கில் இலங்கை சந்திக்கும் நெருக்கடி நிலைமைகள் குறித்து இந்தப் பேச்சுக்களின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டிருந்தது.

இலங்கை சர்வதேச மட்டத்தில் எதிர் கொண்டுவருகின்ற நெருக்கடிகள் தொடர்பில் சீனாவின் நிலைப்பாட்டை தூதுக்குழுவினர் இதன்போது முன்வைத்துள்ளனர்.

குறிப்பாக, ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை எதிர்கொள்ளக்கூடிய நெருக்கடி நிலைமையின்போது இலங்கைக்கு உறுதுணையாக சீனா இருக்கும் என்று தூதுக்குழுவினர் உறுதியளித்துள்ளனர்.

சர்வதேச அரங்கில் இலங்கையின் இறையாண்மையையும் சுயாதீனத்தையும் பாதுகாக்க சீனா எப்போதுமே முன்னிற்கும் என்றும் அவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, யாங் ஜியேச்சி தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

கொரோனா வைரஸ் பரவலுக்கு எதி ரான போராட்டத்திலும் பொருளாதார நடவடிக்கைகளிலும் சீனாவுடன் இணைந்து பணியாற்ற விரும்புவதாக இந்தச் சந்திப்பின்போது பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விரைவில் சீனாவுக்கான விஜயத்தை முன்னெடுக்க வேண்டும் என்றும் சீனத் தூதுக் குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

உலகளாவிய கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் சீனாவின் உயர்மட்ட இராஜதந்திரக் குழுவினர் தெற்காசிய பிராந்தியத்தில் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

(மற்றுமொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# கஞ்சா, மஞ்சள் மூடைகள் மன்னாரில் கைப்பற்றல்!

## பலகோடி ரூபா பெறுமதியானவை மூவர் கைது





மன்னாரில் பல கோடி ரூபா பெறுமதியான கேரளா கஞ்சா பொதிகள் மற்றும் மஞ்சள் கட்டி மூடைகளை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றதுடன் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி, மன்னார் – வங்காலை கடற்கரையோரப் பகுதியில் பதுக்கி வைத்திருந்த நிலையில் 125 கிலோ, 800 கிராம் எடையுள்ள ஒருதொகுதி கேரள கஞ்சா பொதிகளை மன்னார் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

புலனாய்வுத் துறையினரின் இரகசியத் தகவல்களுக்கு அமைவாக மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பந்துல வீரசிங்கவின் பணிப்புரையில் மன்னார் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.கிருஸாந்தன் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை என்பதுடன் கண்டெடுக்கப் பட்ட கேரளா கஞ்சா ஒரு கோடியே 25 லட்சம் ரூபா பெறுமதியானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சட்ட விரோதமான முறையில் இந்தியாவில் இருந்து கடல் மார்க்கமாக தலைமன்னார் பகுதிக்கு கொண்டுவரப்பட்ட ஒரு தொகுதி மஞ்சள் கட்டி மூடைகளை நேற்று மாலை மன்னார் பொலிஸார் பறிமுதல் செய்தமையுடன் ஒருவரைக் கைது செய்தனர்.

இந்த நடவடிக்கையில், மன்னார் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் ராஜபக்ஷ தலைமையிலான பொலிஸ் குழுவினர் ஈடுபட்டனர்.

இதன்போது, பருத்திப்பண்ணை பகுதியில் உள்ள வீட்டின் சமையல் அறையில் பதுக்கி வைத்திருந்த 154 கிலோ, 500 கிராம் எடை கொண்ட மஞ்சள் கட்டி மூடைகள் கைப்பற்றப்பட்டமையுடன், அங்கிருந்தும் 2,250 மில்லிகிராம் கேரளக் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டது.

மேலும், கைப்பற்றப்பட்ட மஞ்சள் கட்டி மூடைகள் சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்படவுள்ளமையோடு, சந்தேகநபர் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை வங்காலை நானாட்டான் பிரதான வீதி, நருவிலிக்குளம் ஆயுர்வேத வைத்தியசாலைக்குப் பின்பகுதியில், 33 கிலோ, 650 கிராம் கேரளா கஞ்சா பொதிகளுடன் இருவர் நேற்றுமுன்தினம் இரவு வங்காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

வங்காலை பொலிஸ் நிலைய உப பொலிஸ் பரிசோதகர் பியல் தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த கஞ்சா பொதிகளை கைப்பற்றினர். இந்த கஞ்சா பொதிகள் 36 லட்சம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கட்டுநாயக்க சுதந்திரவலயத்துக்குட்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் முடக்கம்!

கட்டுநாயக்க சுதந்திர வர்த்த வலயத்திற்குட்பட்ட நிறுவனங்களின் செயற்பாடுகள் முடங்கியுள்ளன.

இலங்கை முதலீட்டு சபையின் உயர் அதிகாரி ஒருவர் இது தொடர்பான தகவலை வெளியிட்டுள்ளார்.

கட்டுநாயக்க சுதந்திர வர்த்த வலயத்திற்குட்பட்ட பகுதியில் தற்போது 85 நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.

எனினும், போதுமான அளவு ஊழியர்கள் வருகை தராத காரணத்தாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா அச்சுறுத்தலைக் கருத்திற் கொண்டு, கட்டுநாயக்கவை அண்மித்த பகுதிகளில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப் பட்டுள்ளது.

இதற்கமைய, அந்தப் பகுதிகளில் போக்குவரத்து சேவைகளும் தடைப்பட்டுள்ள நிலையில், பல ஊழியர்கள் சேவைக்கு வருகை தரவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கதிர்காமத்துக்கு சுற்றுலா சென்றவருக்கு கொரோனா!

மினுவாங்கொட பிரண்டிக்ஸ் ஆடைத் தொழிற்சாலையின் ஊழியர்களுடன் கடந்த 29 ஆம் திகதி முதல் 4 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கதிர்காமத்திற்கு சுற்றுலா சென்ற ஒருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கம்பளை உடகல்பாய பிரதேசத்தை சேர்ந்தவருக்கே இவ்வாறு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர் சுகவீனம் காரணமாக கடந்த (வியாழக்கிழமை) இரவு சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் எனவும் கூறப்படுகின்றது.

கம்பஹாவிலுள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணிபுரிந்த பெண்ணொருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று அண்மையில் உறுதிப்படுத்தப் பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து, அவருடன் பணிப்புரிந்த, நெருங்கியவர்கள் என சிலருக்கும் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தற்போது, நாட்டில் வெவ்வேறு பகுதிகளில் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுவருகின்றனர்.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 488 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை 13பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## அதிகாரக் குவிப்புக்கு நீதிமன்று போட்ட தடை

ஆண்டவன் ஆட்டுக்கு அளந்துதான் வாலைக் கொடுத்திருக்கின்றான் என்பார்கள்.

அதேபோல அவன் தெரிந்துதான் குதிரைக்குக் கொம்பைக் கொடுக்கவில்லை என்றும் கூறுவார்கள்.

இரண்டிலுமே நியாயம் உண்டு. இருக்கின்ற குட்டை வாலை வைத்துக் கொண்டு அதனை ஆடு சுழற்றியடிக்கும் வேகத்தைப் பார்த்தால், தப்பித் தவறி இதற்குக் கொஞ்சம் நீண்ட வாலைக் கொடுத்திருந்தால் அக்கம் பக்கத்தில் யாரும் போய் வர முடியாத நிலைமைதான் ஏற்பட்டிருக்கும் என்பது புரிகின்றது. அதே போல குதிரையின் வேகத்துக்குத் தப்பித் தவறி அதற்குக் கொம்பிருக்குமானால் எதிரில் அகப்பட்டவர்கள் எல்லோரும் – அல்லது அகப்பட்டவை எல்லாம் – துவம்சம்தான்.

ஆட்டுக்கு வாலையும், குதிரைக்குக் கொம்பையும் படைப்பதில் ஆண்டவன் கவனம் செலுத்தியமை போலதான் இருபதாவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பில் உயர் நீதிமன்றமும் பொறுப்புடன் செயற்பட்டிருப்பதாகத் தோன்றுகின்றது. அதிகார எல்லை மீறலுக்கு வாய்ப்பளிக்காமல் அது நாசூக்காகக் கடிவாளமிட்டிருக்கின்றது.

இருபதாவது திருத்தம் மூலம் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்குக் கட்டுமட்டில்லா அதிகாரம் வழங்கப்படுகின்றது, அவர் எதேச்சாதிகாரமாகவும், சர்வாதிகாரமுமாகச் செயற்படக் கூடிய சூழல் ஏற்பட்டுள்ளது, அப்பதவியில் இருப்பவர் எல்லை மீறிச் செயற்பட்டால் தடுக்க முடியாமல் போய் விடும் என்றெல்லாம் பல்வேறு காரண காரியங்கள் – அச்சங்கள் – தெரிவிக்கப்பட்டன.

இவை எல்லாவற்றுக்கும் ஒரே துரும்பில் தீர்வு தந்திருக்கின்றது உயர் நீதிமன்றம்.

இருபதாவது அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவது தொடர்பில் அது தெரிவித்துள்ள பரிந்துரைகளை நோக்கினால், ஏதோ ஆளும் தரப்பு – அரசுப் பிரதிநிதிகள் – சமர்பித்த அந்தத் திருத்தத்தின் எல்லாச் சரத்துக்களையும் அப்படியே ஏற்று, அங்கீகரித்து, ஒட்டுமொத்த திருத்தங்களுக்கும் நீதிமன்றம் பச்சைக் கொடி காட்டிவிட்டதாகவே தோன்றும். ஆனால் நிலைமை அப்படியல்ல. எல்லாவற்றுக்கும் சேர்த்து சரியான ஒரு தடுப்பு – பாதுகாப்பு – காவல் – ஏற்பாட்டை உயர்நீதிமன்றம் தனது தீர்ப்பு மூலம் நாசூக்காக அதற்குள் பொருத்தி விட்டு விட்டது என்றே படுகின்றது.

ஜனாதிபதி பதவி வகிக்கும் ஒருவர் அவர் பதவி வகிக்கும் காலத்தின் போதோ அல்லது அதற்கு முன்னரோ இழைத்த அல்லது இழைக்காமல் விட்ட ஒரு தவறுக்காக அவரின் பதவிக் காலத்தின் போது சட்ட நடவக்கை எடுக்க முடியாது என்பதே 1978 ஆம் ஆண்டில் இந்த அரசமைப்பு தொடங்கிய நாளிலிருந்து 2015 ஒகஸ்டில் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்படும் வரையான காலத்தின் நிலைமையாக இருந்தது. சட்டத்தின் முன் ஜனாதிபதி மேலானவராகப் பார்க்கப்பட்டு, அவரின் நடவடிக்கைகளை சட்டம் தீண்டாதவாறு அவருக்கு விசேட சட்டவிலக்களிப்பு வழங்கப்பட்டு வந்தது.

19 ஆவது திருத்தம் அதனை மாற்றியது. ஜனாதிபதிப் பதவியில் இருப்பவருக்கு எதிராக, அவர் இழைத்த அல்லது இழைக்காமல் போன தவறுகளுக்காக அரசமைப்பின் 126 ஆவது பிரிவின் கீழ் அவர் மீதும் அடிப்படை உரிமை மீறல் வழக்குத் தொடரலாம் என்று அத்திருத்தம் தெரிவித்தது.

அந்தத் திருத்தத்தையே முழுமையாக மாற்றியமைத்து, ஜனாதிபதிக்கு முழுமையாக சட்ட விலக்களிப்பு வழங்கும் வகையில் அவருக்கு எதிராக யாரும் வழக்குத் தொடர முடியாது எனும் பழைய நிலைமையை – 19 ஆவது திருத்தத்துக்கு முந்திய நிலைமையை – மீள நடைமுறைக்குக் கொண்டு வர இப்போதைய இருபதாவது திருத்தம் மூலம் முயற்சி எடுக்கப்பட்டது. அதற்கே தனது அதிகாரம் மூலம் தடை – முட்டுக்கட்டை – போட்டிருக்கின்றது உயர்நீதிமன்றம்.

உயர் நீதிமன்ற உத்தரவுப்படி இதற்கு மேலும் ஜனாதிபதிக்கு சட்ட விலக்களிப்பு வழங்கும் விதத்தில் அரசமைப்பைத் திருத்த வேண்டும் என்றால் மேற்படி இருபதாவது திருத்தத்தை சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்கள் முன்வைத்து அவர்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும்.

தனக்குரிய அதிகாரங்களைக் கூட்டித் தன்னைப் பலப்படுத்திக் கொள்வதற்காக அத்தகைய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தும் விபரீத முயற்சியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இறங்க மாட்டார் எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

அவ்வாறு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை இவ்விவகாரத்துக்காக நடத்த முயற்சிப்பது, அரச நிதியை வீண் விரயம் செய்து, நாட்டின் வளத்தை அவமாக்கும் நடவடிக்கையாகவே முடியும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் ஜனாதிபதியின் அதிகாரத்தைக் கட்டுப்படுத்தல், தேர்தல் ஆணைக்குழுவின் தனித்துவச் செயற்பாடுகளை ஜனாதிபதி கட்டுப்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்தல் மாதிரியான ஏற்பாடுகளை அரசமைப்பில் இடம்பெறச் செய்வதன் மூலம் இந்த இலங்கைத் தீவின் அரசமைப்பு இங்கு சர்வாதிகாரத்தின் ஊற்றிடமாகப் பரிணமிப்பதை உயர்நீதிமன்றம் தடை செய்திருக்கின்றது. அது வரவேற்கத்தக்கதே.

## பொருளாதார நடவடிக்கைக்கான தீர்வை அரசு முன்வைக்கவேண்டும்



கொரோனா அச்சுறுத்தலால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கான தீர்வை, அரசாங்கம் விரைவில் முன்வைக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பொருளாதார நெருக்கடி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். சஜித் பிரேமதாஸ மேலும் கூறியுள்ளவை வருமாறு –

கொரோனா அச்சுறுத்தல் காலத்தினால், இன்று பலருக்கு வேலை வாய்ப்பு இல்லாது போயுள்ளது.

ஏற்றுமதி – இறக்குமதி வர்த்தகமும் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. சிறிய முதல் பெரிய வர்த்தகர்கள் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். மறு புறத்தில் அத்தியாவசியப் பொருள்களின் விலையும் அதிகரித்துள்ளது.

சந்தையில் இன்று அரிசிக்கும் தேங்காய்க்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு பொருளாதார ரீதியாக நாட்டின் அனைத்துத் துறைகளும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் தாக்கத்தை நாம் நீண்ட காலத்திற்கு அனுபவிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது. இதிலிருந்தே, இந்த அரசாங்கத்துக்கு நாட்டு மக்கள் தொடர்பாக எந்தவொரு அக்கரையும் இல்லை என்று தெரிகிறது.

மக்களை வாழ இந்த அரசாங்கம் இடமளிக்கவில்லை என்பதுதான் இதிலிருந்து தெரியவருகிறது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வை அரசாங்கம் இன்னும் வழங்கவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணங்களையும் வழங்கவில்லை.

எனவே, இதற்கான அரசாங்கத்தின் பதில் என்ன என்று நாம் கேட்கவிரும்புகிறோம். இதற்கான திட்டங்கள் ஏதும் இருந்தால், அதனை அரசாங்கம் உடனடியாக நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மக்கள் அசண்டையீனமாகச் செயற்பட்டால் இந்தியா போன்ற நிலைமை இலங்கைக்கும்

### கொரோனாவின் பேராபத்து தொடர்பில் வைத்தியர் ஜயருவன் பண்டார எச்சரிக்கை

கொழும்பு, ஒக் 11

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையில் கொரோனாத் தொற்றாளர்கள் எங்குள்ளார்கள் என்பதை உறுதியாகக் கூற முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என வைத்திய பரிசோதனை நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் வைத்தியர் ஜயருவன் பண்டார தெரிவித்தார்.

இவ்வாறான ஆபத்தான சூழ்நிலையில் மக்கள் மிகுந்த அவதானத்துடன் செய்யப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

மக்கள் அவதானமாகச் செயற்படவில்லை என்றால் எதிர்வரும் நாள்களில் இந்தியா போன்று இலங்கையிலும் நோயாளர்கள் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.



கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக அர்ப்பணிப்பு மேற்கொண்டமையால் தான் அமைதியாக்கப்பட்டேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மீண்டும் அந்தப் பதவியைத் தான் ஏற்க மாட்டேன் எனவும் அவர் கூறியுள்ளார்.

எனினும், பதவியின்றி மக்களைக் காப்பாற்ற தன்னால் முடிந்தவற்றை செய்வதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## புலமைப்பரிசில் மாணவர் இருவருக்கு கொரோனா!

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள இரண்டு மாணவர்களுக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளது.

மூன்று மாணவர்கள் சந்தேகத்தின் பேரில் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இந்த ஐவரும் பரீட்சை எழுதுவதற்கான ஏற்பாடுகள் ஐ.டி.எச். வைத்தியசாலை வளாகத்தில் ஏற்படுத்திக்கொடுக்கப்படவுள்ளன என பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை இன்று (ஞாயிற்றுக்கிழமை) சுகாதார பாதுகாப்புடன் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 5 சிறுபான்மைக் கட்சிகள் 20 ஐ ஆதரிக்க உள்ளன?

கொழும்பு, ஒக்.11

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்ட மூலத்துக்கு ஆதரவாக வாக்களிப்பதற்கு ஐந்து சிறுபான்மையினக்கட்சிகள் தீர்மானித்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி., ஜீவன் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பிள்ளையான தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் மற்றும் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தலைமையிலான முற்போக்கு தமிழர் அமைப்பு ஆகியனவே '20' இற்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தமது கட்சிகளின் ஆதரவை அரச உயர் மட்டத்திற்கு இந்தக் கட்சிகளின் தலைவர்கள் அறிவித்துள்ளனர் எனவும் கூறப்படுகின்றது. இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன 20 ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்கவுள்ளன.

எனினும், ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், 20 தொடர்பில் தமது நிலைப்பாட்டை இதுவரையில் அறிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# புலிகள் மறைத்த தங்கத்தைத் தேடி மட்டக்களப்பில் அகழ்வு நடவடிக்கை





மட்டக்களப்பு, ஒக்.11

மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேற்றாத்தீவு பகுதியில் விடுதலைப் புலிகள் மறைத்து வைத்தனர் எனக் கூறப்படும் தங்கத்தைத் தேடும் பணிகள் நேற்று (சனிக்கிழமை) காலை முன்னெடுக்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை இரவு தேற்றாத்தீவு மயான வீதியில் கடற்கரையை அண்டியுள்ள சவுக்கு மர காட்டிற்குள் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய ஒருவரைக் கைதுசெய்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் அந்தப் பகுதியில் தங்கம் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன என களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த யுத்த காலத்தில் விடுதலைப் புலிகளால் அந்தப் பகுதியில் தங்கம் உட்பட பல பொருள்கள் புதைத்து வைக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனடிப்படையில், களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்றின் அனுமதி பெறப்பட்டு மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகம், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் முன்னிலையில் புதையல் தேடும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குமாரசிறியின் மேற்பார்வையில் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி உப்புல் குணவர்தன வின் தலைமையில் இந்தத் தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்த நடவடிக்கையின்போது மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபை தவிசாளர் ஞா.யோகநாதன், களுவாஞ்சிகுடி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் சத்தியகௌரி தரணிதரன் உட்பட பலர் பிரசன்னமாகியிருந்தனர்.

மேலும், விசேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினரும் இந்தத் தேடுதல் பணிக்கான ஒத்துழைப்புகளை வழங்கியிருந்தனர்.

நேற்றுக் காலை முதல் முன்னெடுக்கப்பட்ட தங்கம் தேடும் பணிகளின்போது எவையும் மீட்கப்படாத நிலையில் தோண்டும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

# 'கொரோனா' சிகிச்சைகளுக்காக கிழக்கில் 4 வைத்தியசாலைகள்!

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்குச் சிகிச்சையளிப்பதற்கு சுகாதார அமைச்சு மாவட்டம் தோறும் குறைந்தது ஒவ்வொரு வைத்தியசாலைகளைப் பயன்படுத்துவதற்கான திட்டத்தில் கிழக்கு மாகாணத்தில் 4 வைத்தியசாலைகளைக் கொரோனாத் தொற்றுக்கான சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்றுவதற்கு சுகாதார அமைச்சு முடிவு செய்து பணிப்புரை வழங்கியுள்ளது.

இந்தத் தகவலை கிழக்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் ரி.லதாகரன் நேற்று தெரிவித்தார்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று அதிகரித்துள்ளமை காரணமாக தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்தற்கான வைத்தியசாலை மேலும் தேவைப்படுகின்றது. இதற்கமைய நாட்டில் உள்ள சகல மாவட்டங்களிலும் மேலும் வைத்தியசாலைகளை கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்றுவதற்கு சுகாதார அமைச்சு முடிவுசெய்து வைத்தியசாலைகளைத் தெரிவு செய்துள்ளது.

இதனடிப்படையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை, கல்முனை சுகாதார பிராந்தியங்களில் உள்ள வைத்தியசாலைகளை மாற்றுவதற்கு அமைச்சு தெரிவு செய்து பணிப்புரை வழங்கியுள்ளது.

அதேவேளை, நாட்டில் மேலும் கொரோனாத் தொற்று அதிகரித்தால் மேலும் வைத்தியசாலைகளைக் கொரோனா சிகிச்சையளிக்கும் வைத்தியசாலைகளாக மாற்ற சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது எனவும் அவர் மேலும் கூறினார்.

# கொக்கட்டிச்சோலையில் விபத்து: இருவர் பலி; இருவர் படுகாயம்!





மட்டக்களப்பு – கொக்கட்டிச்சோலை, மணல்பிட்டி பகுதியில் உழவு இயந்திரம் வேகக்கட்டுப்பாட்டை மீறி வீதியில் தடம்புரண்டதில் அதில் பயணித்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

குறித்த விபத்தில் படுகாயமடைந்த மேலும் இருவர், சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கடந்த (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற இந்த விபத்தில் கொக்கட்டிச்சோலை 10 ஆம் பிரிவைச் சேர்ந்த 17 வயதுடைய தவக்குமார் டிலஷ்ன், 19 வயது டைய ஞானசேகரன் கிளின் என்ற இரு இளைஞர்களே உயிரிழந்துள்ளனர்

கொக்கட்டிச்சேலை – தாந்தமலைபிரதானவீதியில், நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் கொக்கட்டிச்சோலை பகுதியில் இருந்து தாந்தாமலை பகுதியை நோக்கி உழவு இயந்திரத்தில் நான்கு பேர் பயணித்தனர்.

இதன்போது மணல்பிட்டி சந்தி பகுதியில், வீதியில் வந்த ஓட்டோ ஒன்றுக்கு வழிவிட முற்பட்டபோது, உழவு இயந்திரம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, வீதியை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது எனப் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் மட்டு.போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளமையுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை போக்குவரத்து பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# புதிய கொரோனா தொற்றாளர்கள் அனைவரும் மினுவாங்கொடை கொத்தணியை சேர்ந்தவர்கள்

## இப்படிக் கூறுகின்றார் இராணுவத் தளபதி

நாட்டில் தற்போது அடையாளம் காணப்பட்ட புதிய தொற்றாளர்கள் அனைவரும், மினுவாங்கொடை கொத்தணியைச் சேர்ந்தவர்கள் என இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என சமூகத்தில் எவரும் அடையாளம் காணப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் தொடர்பாக தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே சவேந்திர சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு –

மினுவாங்கொடை கொத்தணியை சேர்ந்த 1083 பேர், கொரோனா வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், இந்த நோய்த்தொற்றுடன் தொடர்புடைய அனைவரையும் அடையாளம் காணவும், அவர்களை தனிமைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. – என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை பாணத்துறை வைத்தியசாலையில் பணிபுரிகின்ற தாதியர் ஒருவரின் மகளுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து, வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவு, தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக நிர்வாகத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் மாத்திரம் 7 ஆயிரத்து 196. பி.சி.ஆர். சோதனைகள், இலங்கையில் நடத்தப்பட்டுள்ளன. ஒரே நாளில் நாட்டில் நடத்தப்பட்ட பி.சி.ஆர்.சோதனைகளில் இதுவே அதிக எண்ணிக்கையாகும் என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரத்து 523 ஆக அதிகரித்துள்ளது. இலங்கையில் இதுவரை 13 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனாவிலிருந்து பலர் குணமடைந்தனர்

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 10 பேர் குணமடைந்துள்ள நிலையில் தொற்றிலிருந்து மீண்டோரின் எண்ணிக்கை மூவாயிரத்து 306 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, இதுவரை கொரோனா தொற்று கண்டறியப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை நான்காயிரத்து 523 ஆகப் பதிவாகியுள்ளது.

இவர்களில், அண்மையில் வைரஸ் தொற்று பரவல் ஆரம்பித்த மினுவங்கொட கொத்தணியில் மட்டும் இதுவரை ஆயிரத்து 83 பேருக்கு வைரஸ் தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்நிலையில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 204 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா தொற்றால் இதுவரை 13 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இரு குடும்பங்கள் வவுனியாவில் சுய தனிமைப்படுத்தலில் உள்ளன

யாழ்ப்பாணம், புங்குடுதீவில் பிறந்தநாள் நிகழ்வில் கலந்து கொண்டிருந்த இரு குடும்பத்தினர் வவுனியா பூந்தோட்டம் சிறி நகரில் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மினுவாங்கொட ஆடைத் தொழிற்சாலையில் கடமையாற்றிவரும் பெண்ணொருவர் கடந்த 30 ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்குச் சென்ற நிலையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை கண்டறியப்பட் டது.

இந்நிலையில், அந்தப் பெண்ணுடன் தொடர்புடையவர்களைக் கண்டறிந்து தனிமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதனொரு கட்டமாக, புங்குடுதீவில் பிறந்த நாள் நிகழ்வொன்றில் அந்தப் பெண் கலந்து கொண்டிருந்த நிலையில் அந்த நிகழ்வில் கலந்துகொண்ட வவுனியாவை சேர்ந்த இரண்டு குடும்பத்தினரே இவ்வாறு சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களுக்கான பி.சி. ஆர். பரிசோதனைகள் சுகாதாரப் பிரிவினரால் நேற்று சனிக்கிழமை காலை எடுக்கப்பட்டுள்ளன.

# ஊரடங்கு மீறிய 97 பேர் கைது!

நாட்டின் சில பகுதிகளில் பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவைமீறிய 97 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

27 வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அத்துடன் கம்பஹா மாவட்டத்தின் 18 பொலிஸ் பிரிவுகளில் அமுல்படுத்தப்பட்டுள்ள பொலிஸ் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், அந்தப் பகுதிகளில் உள்ள சதொச, கூட்டுறவு நிலையம், அரச மருந்தகம், சிறப்பு அங்காடிகள் மற்றும் அத்தியாவசிய பொருள்கள் விற்பனை நிலையங்கள் என் பனவற்றை நேற்றுக் காலை 8 மணிமுதல் இரவு 8 மணிவரை திறக்கமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# அனலைதீவு தொடர்ந்தும் முடக்கம் 39 பேர் கட்டாய தனிமைப்படுத்தலில்!





## 10 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்

அனலைதீவு, ஒக். 11

அனலைதீவு பிரதேசத்தில் மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட மூவர், நீதிவானின் அனுமதியுடன் பீ.சீ.ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்பட்டு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்

இதனையடுத்து அனலைதீவு பகுதியில் மஞ்சள் கடத்தலில் ஈடுபட்ட நபர்கள் நடமாடினர் எனக் கருதப்படும் 10 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேர் கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையோடு, அனலைதீவு பிரதேசம் நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) காலையிலிருந்து அப்பிரதேசத்திலிருந்து யாரும் வெளியேறாதவாறும் பிரதேசத்துக்குள் புதிதாக யாரும் உட்பிரவேசிக்காதவாறும் முடக்கப்பட்டுள்ளது.

நேற்றும் அந்த முடக்கம் நடைமுறையில் உள்ளதாக ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தகவல்கள் தெரிவித்தன.

மஞ்சள் கடத்தலில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட மூன்று நபர்களுக்கும் பீ.சீ.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த பீ.சீ.ஆர்.பரிசோதனை முடிவுகள் வரும் வரை முடக்கம் அமுலில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

மேலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 10 குடும்பங்களைச் சேர்ந்த 39 பேருக்கு, உலர் உணவுப் பொருள்கள் ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தால் வழங்கி வைக்கப்பட்டுள்ளமையோடு, அனலைதீவு பகுதி ஊர்காவற்துறை பொலிஸார் மற்றும் கடற்படையினர், சுகாதார பிரிவினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது

மேலும், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினரால் அவசர கோரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது. கடல் மார்க்கமாக பொருள்கள் கடத்தி வருபவர்களின் தகவல் இருப்பின் பொதுமக்கள் 0212 222 6666 எனும் இலக்கததுக்கு அறியத் தருமாறு குறிப்பிட்டுள்ளதோடு, மஞ்சள் கடத்தி வந்தமையுடன் சம்பந்தப்பட்டவர்கள் அனலைதீவில் 3 பேர் கைது செய்யப்பட்டு தனிமைப்படுத்தப்பட்ட சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனலைதீவின் பல பகுதிகளில் நடமாடியதாலும் இவ்வாறான வேறு சிலர் இருக்கலாம் என சந்தேகிக்கப்படுவதாலும் அனலைதீவிலிருந்து வெளியே வருவதும் உள்ளே செல்வதும் நேற்றுமுன்தினம் முதல் மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி நபர்களில் ஒருவர் தப்பி சென்று, காரைநகரில் தங்கியிருந்த வீடும் அந்த வீட்டிடைச் சார்ந்தோரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். குறிப்பாக தீவகத்தில் கடல் மார்க்கமாக ஏற்படும் தொடர்புகளால் ஏற்படக் கூடிய கொரோனா நோய் பரம்பலைக் கட்டுபடுத்த அனைவரது ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கின்றோம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## தமிழரசு மத்தியகுழு உறுப்பினர் மீது பொலீஸ் தாக்கியதாகக் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக்.11

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ஜெயக்குமார் மீது, கிளிநொச்சி குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி ஒருவர், கிளிநொச்சி பொதுச் சந்தை வளாகத்தில் வைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளார் எனக் குற்றச்சாட்டொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது –

நேற்றுமுன்தினம் (வெள்ளிக்கிழமை) கிளிநொச்சி பொதுச்சந்தையில் தந்து மரக்கறி வாணிபத்தில் வியாபாரம் செய்து கொண்டிருந்த தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் ஜெயக்குமார் மீது சிவில் உடையில் இருந்த கிளிநொச்சி குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி, இழுத்து விழுத்தி தாக்குதல் மேற்கொண்டார் என மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி பொதுச்சந்தைக்கு விஜயம் மேற்கொண்ட கிளிநொச்சி குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினர், சந்தை வர்த்தகர்களிடம் முகக்கவசம் அணியுமாறு அறிவுறுத்திச் சென்றிருந்தனர். மீண்டும் 5 நிமிடத்தில் வந்த அவர்கள் ஜெயக்குமாரிடம் ஏன் முகக்கவசம் அணியவில்லை என கேட்டனர் என்று கூறப்படுகின்றது.

இதன்போது, நண்பகல் என்பதால் நுகர்வோர் அதிகமாக இருக்கிறார்கள். கடையை இப்படியே விட்டு செல்ல முடியாது. அதனை விட ஒரு காலை இழந்த மாற்றுத் திறனாளியான தான், எனது உதவியாளர் வருகைக்காக காத்திருக்கின்றேன் என அவர் பதிலளித்தார் எனக் கூறப்படுகின்றது.

அதனைத் தொடர்ந்து, உனக்கு கடைக்கு போய் வாங்குவதற்கு என்ன என்று கேட்டவாறு, சிவில் உடையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் மாற்றுத்திறனாளியான ஜெயக்குமாரை இழுத்து வீழ்த்தி தாக்கினார் என மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினரும் சந்தை வர்த்தகருமான ஜெயக்குமார், கிளிநொச்சி பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயத்திலும் மனித உரிமை ஆணைக் குழுவிலும் தனது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## தினேஷ் சந்திமால், திசார பெரேரா இராணுவ அதிகாரிகளாக நியமனம்!





கொழும்பு, ஒக்.11

இலங்கை கிரிக்கட் அணியின் வீரர்களானதினேஷ் சந்திமால் மற்றும் திசார பெரேரா ஆகியோர் இராணுவ அதிகாரிகளாக நேற்று முன்தினம் (வெள்ளிக்கிழமை) நியமிக்கப்பட்டனர்.

இலங்கை கிரிக்கட் அணியின் முன்னணி வீரர்களான தினேஷ் சந்திமால் மற்றும் திசார பெரேரா ஆகியோர் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனெரல் சவேந்திர சில்வாவால் நேற்று; இவ்வாறு நியமிக்கப்பட்டனர்.

மேலும் இந்த இருவரும் தன்னார்வ இராணுவத் தளபதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனம் நேற்று வழங்கப்பட்டுள்ள நிலையில், நியமனத்தில் பின்னர் குறித்த இரு வீரர்களும் இராணுவத்தளபதி லெப்டினன்ட் ஜெனெரல் சவேந்திர சில்வாவுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

ஏற்கனவே, இலங்கை கிரிக்கட் அணியின் வீரர் திஸ்ஸர பெரேரா, இராணுவப்படையின் கிரிக்கட் குழாமின் வளர்ச்சிக்கு பங்களிப்பு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இராணுவத்தின் பங்களிப்பை வாழ்த்துகிறார் கோட்டா

### 71ஆவது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி



கொழும்பு,ஒக்.11

நாட்டின் இடர் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளில் இராணுவம் வழங்கி வரும் பங்களிப்புக்கு மதிப்பளிக்கின்றேன்.

– இவ்வாறு ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இராணுவத்தின் 71ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

நாட்டின் ஐக்கியம், இறையாண்மை, ஒருமைப்பாட்டைப் பாதுகாப் பதில் இலங்கை இராணுவம் நேரடியான மற்றும் வெற்றிகரமான பங்களிப்பை வழங்கியுள்ளது.

அத்துடன் நிற்காமல் தாய் நாட்டுக்கு ஏற்பட்ட பல்வேறு அச்சுறுத்தல்கள், சவால்கள், இடர்களில் இருந்து பாதுகாக்கும் காவல் அரணாகச் செயற்பட்டுள்ளனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோயைக் கட்டுப்படுத் துவதில், இலங்கை இராணுவத்தின் அர்ப்பணிப்பை நான் மதிப்பாகக் கருது கின்றேன்.

நாட்டின் பாதுகாப்பு , இடர்முகாமைத்துவம் உட்பட அபிவிருத்திச் செயற்பாடு களுக்கு இராணுவம் வழங்கும் பலம் தொடர்பாகவும் எனது நன்றிகைளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன் இன்று கொண்டாடப்படும் இலங்கை இராணுவத்தின் 71ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்காக வாழ்த்துக் களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் – என்றுள்ளது.

## ஜயவர்தனபுர பல்கலை மாணவிக்கும் தொற்று

கொழும்பு, ஒக்.11

ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வரும் மாணவியொருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த மாணவி மினுவங்கொடை பிராண்டிக்ஸ் ஆடை உற்பத்தி நிறுவனத்தில் பணிபுரியும் பெண்ணொருவரின் உறவினருடன் பல்கலைக் கழகத்திற்கு வெளியே உள்ள ஒரு தனியார் விடுதியில் தங்கியிருந்தார் எனத் தெரியவந்துள்ளது. எவ்வாறாயினும், பல்கலைக்கழகத்திற்கு விடுமுறை வழங்கப் பட்டதன் காரணமாக அந்த யுவதி கடந்த வாரம் பாணதுறை பகுதியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்றுவிட்டாள எனத் தெரிவிக்கப்படுகிறது.

மினுவங்கொட பிராண்டிக்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் பெண்ணொருவரின் உறவினருடன் தங்கியிருந்த காரணத்தினால் அவருக்கு பாணதுறை வைத்திய சாலையில் பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் அவருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டிருந்தமை உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், கொரோனா தொற்றுக்குள்ளான குறித்த யுவதி கொழும்பு ஐ.டி. எச். மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மேலும் ஐ.டி.எச். மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்ட பீ.சி.ஆர். பரிசோதனைகளிலும் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பது உறுதியாகியுள்ளது.

## கம்பஹாவில் ஞாயிறு ஆராதனைகள் நிறுத்தம்!

கம்பஹா மாவட்டத்திலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களிலும், ஞாயிறு ஆராதனைகளை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பேராயர் இல்லத்தின் ஊடகப் பேச்சாளர் அருட்தந்தை கலாநிதி கெமிலஸ் பெர்னாண்டோ இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளாஜர்.

இதற்கமைய, எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு ஞாயிறு ஆராதனைகளை இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், நாளாந்தப் பூஜைகள், திருமண நிகழ்வுகள் மற்றும் இறுதி சடங்கு நடவடிக்கைகளுக்கு, சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கிணங்க, 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# சீனாவைப் போன்ற துரிதவளர்ச்சியை இலங்கைக்கு ஏற்படுத்துவதே இலக்கு!

## ஜனாதிபதியின் எதிர்காலத் திட்டம் இது



கொழும்பு, ஒக்.11

சீனா சிறந்த வளர்ச்சிப் பாதையை நோக்கி செல்வதைப் போன்று இலங்கையையும் கொண்டு வருவதே எனது குறிக்கோள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழுவின் அரசியல் பணியகத்தின் உறுப்பினரும்,வெளியுறவு ஆணையத்தின் இயக்குநருமான யாங் ஜீச்சி தலைமையிலான ஏழு பேர் கொண்ட குழுவே கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்திருந்தது.

இந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும், இலங்கையின் அபிவிருத்தி முயற்சிகளுக்குத் தொடர்ந்தும் உதவியளிப்பதாக சீன உயர் மட்ட குழுவினர் இதன் போது தெரிவித்துள்ளனர்.

சீனா – இலங்கை இருதரப்பு உறவுகள் ஏற்கனவே மிகவும் திருப்திகரமான நிலையில் உள்ளன. இந்த நட்பைப் பேணுவதும் வளர்ப்பதும் சீன ஜனாதிபதி ஶ்ரீ ஜின்பிங்கின் முன்னுரிமையாகும். ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை உட்பட சர்வதேச அரங்கங்களில் இலங்கையின் சுதந்திரம், இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாடு ஆகியவற்றில் சீனா உறுதியாக நிற்கிறது என்றும் சீனக் குழு இதன்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தது.

கடந்த பொதுத்தேர்தலில் ஜனாதிபதி ஶ்ரீ ஜின்பிங்கின் மகத்தான வெற்றியைப் பாராட்டிய யாங் ஜீச்சி, 35 ஆண்டுகளுக்கு முன்பு சீனக் குழுவுடன் மொழிபெயர்ப்பாளராக இலங்கைக்கு விஜயம் செய்தமையை நினைவு கூர்ந்தார்.

தனது நான்கு நாடுகளின் ஆசிய சுற்றுப்பயணத்தில் இலங்கை முதல் நாடு என்றும், சீன ஜனாதிபதி இலங்கையுடனான இருதரப்பு உறவுகளை வளர்ப்பதற்கு அதிக முன்னுரிமை அளித்துள்ளார் என்றும் அவர் ஜனாதிபதியிடம் கூறினார்.

இதேவேளை தற்போதைய சீன – இலங்கை உறவுகளின் நிலையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வரவேற்றார்.

மேலும் அதிகாரத்தில் உள்ள அரசாங்கங்களை வேறுபடுத்தாமல் இலங்கைக்கு ஆதரவளித்த நீண்டகால நண்பராக சீனாவை ஜனாதிபதி வர்ணித்தார்.

பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் சீனா முக்கிய பங்கு வகித்தது. யுத்தம் முடிவடைந்த பின்னர் இருதரப்பு உறவுகள் ஒரு புதிய நிலையை எட்டின. தீவின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு சீனா அளித்த பங்களிப்பை ஜனாதிபதி நினைவு கூர்ந்தார்.

# குடிவரவு, குடியகல்வு திணைக்களத்துக்கு பொதுமக்கள் வருகை தற்காலிக நிறுத்தம்!

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடி காரணமாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் பிரதான அலுவலகம் மற்றும் பிராந்திய அலுவலகங்களுக்கு பொது மக்கள் வருகைதருவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, நாளை 12 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை இந்தத் தடை தொடரும் என்பதுடன் தொலைபேசி மற்றும் மின்னஞ்சல் ஊடாக மக்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குடிவரவு குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிக்கை ஒன்றின் மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், குடிவரவு குடியகல்வுத்திணைக்களத்திடம் இருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அலுவலக நேரங்களில் (மு.ப. 8 மணி தொடக்கம் பி.ப. 4.30வரை) கீழ் காணும் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக அல்லது மின்னஞ்சல் ஊடாக உரிய ஏற்பாடுகளைச் செய்து கொள்ளுமாறு பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கடவுச்சீட்டுப் பிரிவுக்கு 070 – 7101060, 070 – 7101070 ஆகிய இலக்கங்களிலும், குடியுரிமைப் பிரிவு 070 – 7101030 ஆகிய தொலைபேசி இலக்கத்திலும், வெளிநாட்டுத் தூதரகப் பிரிவுக்கு 011- 5329233, 011 - 5329235 ஆகிய இலக்கங்களிலும், விசா பிரிவுக்கு 070 – 7101050 என்ற தொலைபேசி இலக்கத்திலும் துறைமுகப் பிரிவுக்கு 077 – 7782505 என்ற இலக்கத்திலும் தொடர்புகொண்டு சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதேபோன்று, –cvisaimmigration.gov.lk, acvisa1immigration.gov.lk, acvisa2immigration.gov.lk. acvisaimmigration.gov.lk என்ற மின்னஞ்சல்கள் ஊடாகவும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

# பரீட்சை எழுதும் மாணவர் ஊரடங்கு காலத்தில் பரீட்சை அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்தலாம்

கொரோனா தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கையாக ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் இருந்து பரீட்சை எழுதவுள்ள மாணவர்களுக்கு பொலிஸாரால் விசேட அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைகளுக்குத் தோற்றவுள்ள மாணவர்கள், பரீட்சை அனுமதிப் பத்திரத்தை ஊரடங்கு வேளை அனுமதிப்பத்திரமாக பயன்படுத்தலாம் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை என்பன நடத்தப்படவுள்ளன.

இந்நிலையில், பரீட்சை மத்திய நிலையங்களைப் பயன்படுத்தும் முறைமை தொடர்பாக கல்வி அமைச்சில் கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது, பரீட்சை நடவடிக்கைகளுக்காக பொலிஸார் மற்றும் போக்குவரத்துத் துறையின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேலும், ஊரடங்குச் சட்டம் அமுலபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் பரீட்சைகளுக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்காக, அந்தப் பகுதிகளை அண்மித்த இடங்களில் பரீட்சை மத்திய நிலையங்களை ஏற்படுத்துவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, மாணவர்களை பரீட்சை மத்திய நிலையங்களுக்கு அனுமதிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறைமை பற்றியும் ஆராயப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

# திருமலைப் பெண்ணுக்கும் கொரோனா நோய் தொற்று!

திருகோணமலை, கந்தளாய் பகுதியைச் சேர்ந்த பெண்ணுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த பகுதியைச் சேர்ந்த 43 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என கந்தளாய் பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

கந்தளாய் பிரதேச கொரோனா நிலைமை தொடர்பான ஊடக சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை கந்தளாய் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற போதே அவர் இந்தத் தகவலை வழங்கினார்.

வைரஸ் தொற்று கண்டறியப்பட்ட பெண், கொழும்பில் இருந்து கந்தளாய்க்கு கடந்த மாதம் 26 ஆம் திகதி சென்றார் எனவும் பின்னர் 28 ஆம் திகதி அவர் மீண்டும் கொழும்புக்ச்கு சென்றுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இந்நிலையில் அவருக்கு கொரோனா தொற்று உள்ளமை கொழும்பில் வைத்தே கண்டறியப்பட்டுள்ளது. அந்தப் பெண், கந்தளாய் பகுதியில் தங்கியிருந்தபோது அவருடன் நெருங்கிப் பழகியவர்களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என பிரதேச செயலாளர் குறிப்பிட்டார்.

மேலும், கந்தளாய் பிரதேசத்தில் அண்மைக்காலமாக கொரோனா தொடர்பாக முரணான தகவல்கள் பரப்பப்பட்டு வருகின்றன எனத் தெரிவித்த அவர் ஊடகங்களின் ஊடாக உண்மையான தகவல்கள் சென்றடைய வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# வெடுக்குநாறி ஆலய வழக்கு நிர்வாகத்தினருக்குப் பிணை!

வெடுக்குநாரி ஆதிலிங்கேஸ்வரர் ஆலய நிர்வாகத்தினருக்கு எதிராக நெடுங்கேணி பொலிஸாரால் வவுனியா நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நிர்வாகத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

நெடுங்கேணி வெடுக்குநாரி மலை மற்றும் அதனை அண்டிய பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்திற்குச் சொந்தமானது எனத் தெரிவித்து ஆலயத்தில் பொதுமக்கள் வழிபடுவதற்குத் தடை ஏற்படுத்தப்பட்டது. இந்நிலையில் பொதுமக்களின் முயற்சியால் வழிபடுவதற்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது.

எனினும், ஆலய வளாகத்தில் கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கும் பூசை வழிபாடுகளை முன்னெடுப்பதற்கும் நெடுங்கேணி பொலிஸாரால் தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டு வந்தது.

கடந்தவாரம் ஆலயத்தின் பூசகரை நெடுங்கேணி பொலிஸார் விசாரணைக்காக அழைத்து ஆலய வளாகத்திற்குள் சென்று பூசை நிகழ்வுகளை மேற்கொண்டால் கைதுசெய்வோம் எனத் தெரிவித்திருந்தமையுடன் தொல்பொருள்கள் சார்ந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் வவுனியா நீதிவான் நீதிமன்றில் வழக்கையும் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கு வவுனியா நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போது ஆலயத்தின் சார்பில் தலைவர் சசிகுமார், செயலாளர் தமிழ்ச்செல்வன், பூசகர் மதிமுகராசா ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இதன்போது, நீதிமன்றில் ஆஜராகியிருந்த பொலிஸார் ஆலய நிர்வாகத்தினரைக் கைதுசெய்யவேண்டும் என்றும் தொல்பொருள் சார்ந்த விடயம் என்பதால் வழக்கு விசாரணைகள் முடிவடையும் வரை ஆலய நிர்வாகத்தினரை விளக்கமறியலில் வைக்கவேண்டும் எனவும் நீதிவானிடம் கோரினர்.

இதற்கு ஆலயத்தின் நிர்வாகத்தின் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளால் கடுமையான எதிர்ப்புக்கள் வெளியிடப்பட்டிருந்தன. தெற்கிலும் ருவன் வெலிசாய போன்ற பல்வேறு பகுதிகள் தொல்பொருள் திணைக்களத்தின் கீழேயே இருக்கிறது. எனினும், அங்கும் வழிபாடுகள் இடம்பெறுகின்றமை நீதிவானுக்குச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் நிமித்தம் 50 ஆயிரம் ரூபாய் சரீரப்பிணையில் ஆலய நிர்வாகத்தினர் விடுவிக்கப்பட்டமையுடன் எதிர்வரும் நவம்பர் 23ஆம் திகதிக்கு வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இந்நிலையில், இந்த விடயங்களுக்கு நீதிமன்றங்களின் ஊடாக தீர்வைப் பெறுவது என்பது கல்லிலே நார் உரிப்பதற்கு ஒப்பானது எனவும் இவற்றுக்கு அரசியல் ரீதியாகவே முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் ஆலய நிர்வாகம் சார்பாக ஆஜரான சட்டத்தரணி சுகாஷ் ஊடகங்களிடம் தெரிவித்தார்.

ஆலய நிர்வாகத்தினர் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி சிற்றம்பலம் தலைமையில் 15 இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

# தொற்றிலிருந்து நாட்டைக் காப்பதே 20 ஆம் திருத்தத்தை விட முக்கியம்!

## இப்படி வலியுறுத்துகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு.ஒக்.10

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை விட கொரோனா வைரஸின் தாக்கத்திலிருந்து நாட்டைப் பாது காப்பதே தற்போது முக்கியமானது என ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப் பினருமான திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் 20ஆவது அரசமைப்பு திருத்தத்தை அவசரமாக நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கப்பட்டால் அதனூடாக அரசாங்கத் தின் சுயநலமான போக்கை தெரிந்து கொள்ள முடியும். சர்வாதிகார ஆட்சிக்கான பண்புகளை உள்ளடக்கி உரு வாக்கப்பட்டுள்ள 20ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு நாங்கள் எப்போதுமே இணக்கம் தெரிவிக்கபோவ தில்லை.

20ஆவலது திருத்தம் தொடர்பான இரண்டாம் கட்ட வாசிப்புகள் நாடாளுமன்றத்தில் ஆரம்பமானவுடன் எதிர்ப்பை வெளியிடுவோம்.

கொரோனா வைரஸ் பரவல் கார ணமாக நாடு பாரிய நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது. இந்நிலையில் வைரஸ் பரவலலிலிருந்து நாம் பாதுகாப்பாக இருப்பது



தொடர்பிலே சிந்திக்கவேண்டும்.

வைரஸ் பரவலின் காரணமாக 20 இற்கு எதிராக ஏற்பாடு செய்திருந்த பேரணிகள் மற்றும் ஆர்பாட்டங்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சூழ்நிலையில் 20ஐ விட வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதே மிகமுக்கியமா னதாகும். எவ்வாறாயினும் நாடாளுமன்றத்திற்குள் 20 இற்கு கடும் எதிர்ப்பை வெளியிடுவோம். - என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## குடாநாட்டில் கடற்தொழிலுக்குச் செல்லும் மீனவர்களைப் பதிவு செய்ய நடவடிக்கை

கொழும்பு,ஒக்.10

இலங்கையில் கொரோனாவின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் கடலுக்குச் செல் லும் மீனவர்கள் இந்திய மீனவர்களுடனான தொடர்புகளை மேற்கொண்டு வருகின்றமை அவதானிக்கப்படும் வகையில் யாழ். மாவட் டத்தில் தொழி லுக்குச் செல்லும் மீனவர்க ளைக்கடலுக்குள்செல்லும்நேரம்,கரைசேரும் நேரம் என்ப வற்றை பதிவு செய்வதற்குத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தாக்கத்தில் இருந்து பொது மக்களைப் பாதுகாப்பதற்கான விசேட கூட்டம் தெல்லிப்பளை பிரதேச செயலகத்தில் இன்று நடைபெற்றபோதே இத்தகைய முடிவு எடுக் கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் கடலுக் குச் செல்லும் மீனவர்களின் விபரங்களும் அவர்கள் சென்று திரும்பும் நேரங்களும் கையொப்பத்துடன் பெறுவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.குறித்த நடவடிக்கை யானது தேவைக்கேற்றபடி மாற்றங்கள் செய்ய முடி யும் எனவும் வலிகாமம் வடக்கு பிரதேச செய லாளர் தெரிவித்தார்.

## ரிட்ஜ்வே ஆஸ்பத்திரியில் தாதிக்கும் கொரொனா!



கொழும்பு, ஒக்.10

கொழும்பில் உள்ள ரிட்ஜ்வே மருத்துவ மனையில் தாதியொருவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இருக்கின்றமை கண்டறியப் பட்டுள்ளது.

இவருக்கு, நேற்று பி.சி.ஆர். பரிசோதனை செய்யப்பட்ட நிலையில் வைரஸ் தொற்று உறு திப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு நகராட்சி ம ன்றத் தின் தலைமை மருத்துவ அதிகாரி வைத் தியர் ருவன் விஜெமுனி தெரிவித் தார்.இதே வேளை, அந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குழந்தை மற்றும் இன்னொரு குழந்தையின் தந்தை ஆகியோருக்கு ஏற்க னவே கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட் டிருந்தது.

இந்நிலையில், வைரஸ் தொற்று கண்ட றியப்பட்ட தாதி உத்தியோகத்தர் குழந்தை களுக்கு சிகிச்சை அளிக்கும் விடுதியில் அண் மையில் கடமையில் இருந்தார் எனத் தெரிவிக் கப்படுகிறது.

# ரூ.8 லட்சத்து 25 ஆயிரம் லஞ்சத்தை பொலிஸுக்கு என வாங்கியவர் கைது

உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்குவதற் கெனக்கூறி நகைக்கடை வர்த்தகர் ஒருவரிடம் 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை லஞ்சமாக வாங் கினார் எனக் கூறப்படும் காத்தான்குடி நகரசபை யின் முன்னள் உறுப்பினர் எம்.எஸ்.சியாட் என்பவர் நேற்று மாலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நய ணசிறி தெரிவித்தார்.

பிரதி பொலிஸ்மா அதிபருக்கு ரூபா 5 லட்சமும் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு ரூபா 3 லட்சமும் கொடுக்க வேண்டுமென 8 லட் சம் ரூபாவையும் தனக்கு 25 ஆயிரம் ரூபா வுமென 8 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை இந்தநபர் லஞ்ச மாகப் பெற்றுள்ளமை தெரியவந்துள்ளது.

களவாடப்பட்ட நகைளைக் கொள்வ னவு செய்த நகை வியாபாரியொரு வரை காப்பாற்றுவார் எனச் சொல்லியே இத்தொகை அவரிடமிருந்து லஞ்சமாகப் பெறப்பட்டுள்ள தாகத் தெரியவருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி யின் காத்தான்



குடி நகர சபை உறுப்பினராக கடமையாற்றிய இவர், லங்கா பொதுஜன பெரமுனவின் பிரதேச அமைப்பாளர் எனப் பொய் கூறி மக்களை ஏமாற்றியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட பணத்துடன் அந் நபர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்களின் அர்ப்பணிப்பு அரசினால் புறக்கணிப்பு

## சீறுகின்றார் முருத்தெட்டுவே ஆனந்த தேரர்



கொழும்பு.ஒக்.10

பௌத்த பிக்குமாரின் பலத்தைக் குறைத்து மதிப்பிட வேண்டாம். கறி யில் போட்ட கருவேப்பில்லை போல அவர்களைத் தூக்கி எறிய வேண் டாம். அரசாங்கம் தடம் மாறினால், அதனை தூக்கிய எறிய நாங்கள் தயங்க மாட்டோம் என்று 'துறவிகள் குரல்' அமைப்பின் தலைவர் முருத் தெட்டுவே ஆனந்த தேரர் தெரிவித் துள்ளார்.

கொழும்பு அபயராம விகாரையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார். இதன் போது பேசிய அவர் -

எவ்வித பதவி மற்றும் சிறப்புரிமைகளை எதிர் பார்த்து 'துறவிகள் குரல்' தற்போது அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வரப் பாடுபடவில்லை. நாட டுக்கும், இனத்திற்கும் நன்மை பயக்கும் அர சாங்கத்தை அமைப்பதே ஒரே எதிர் பார்ப்பாக இருந் தது.

கடந்த நல்லாட்சி அர சாங்கம் நாட்டுக்கும், இனத் திற்கும் பிரச்சினைகள் ஏற்ப டும் வகை யில் நாட்டின் ஆட்சியை முன் னெடுத்தன் காரணமாகவே அந்த அர சாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற் றும் நடவடிக்கைகளை 'துறவிகள் குரல்' ஆரம்பித்தது.

தற்போதைய அரசாங்கம், அதனை ஆட்சிக்கு கொண்டுவர அர்ப் பணிப்புடன் செயற்பட்டவர்களின் ஆலோசனைக்கு அமைய செயற்படு வதில்லை என்பதை காணமுடி கின்றது. நாங்கள் ஆட்சிக்கு கொண்டு வந்த அரசாங்கத்தை நாங்கள் பாது காக்க வேண்டும். நாங்கள் சுட்டிக் காட்டும் தவறுகளை திருத்திக் கொண்டு முன்நோக்கி செல்ல வேண் டும்.

நாங்கள் அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தாலும் அரசாங்கத்து டன் நெருங்கி இருப்பவர்கள் வானும், மண் ணும் போல் இருக்கின்றனர். அரசாங்கம் தவறான வழியில் செல் கிறது என்பது எமக்கு தெரிவதால், அதனைச் சரி செய்வது எமது கடமை.

பௌத்த பிக்குமாரின் பலத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம். கறி யில் போட்ட கருவேப்பில்லை போல் தூக்கி எறிய வேண்டாம். அரசாங்கம் தடம் மாறினால், அதனை தூக்கிய எறிய நாங்கள் தயங்க மாட்டோம்.

அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வர எந்த வேலைகளை செய்யாதவர்கள் அரசாங்கத்தில் முன் னிலையில் உள்ளனர். பணம், உழைப்பு மற்றும் அர்ப்ப ணிப்பு செய் தவர்கள் மறந்து போயுள்ளனர். இவர்களிடம் கவனமாக இருக்கு மாறு ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுக்கின்றோம். - எனவும் ஆனந்த தேரர் குறிப்பிட்டுள் ளார்.

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டவாறு நாளை நடக்கும்

### பரீட்சைகள் ஆணையாளர் தெரிவிப்பு

கொழும்பு.ஒக்.10

2020ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சை திட்டமிட்டபடி ஞாயிறு நடைபெறும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் ஜெனரல் சனத் பூஜித தெரிவித்துள்ளார்.

இது குறித்து கொழும்பில் இன்று ஊடகங் களிடம் கருத்துத் தெரிவித்த அவர்,

புலமைப்பரிசில் தேர்வுக்கு இம்முறை 3 இலட்சத்து 31ஆயிரத்து 694 மாண வர்கள் விண் ணப்பித்திருந்த நிலையில், சிங்கள மொழியில் 2 இலட்சத்து 48 ஆயிரத்து 72 மாணவர்களும், தமிழ் மொழியில் 83 ஆயிரத்து 622 மாண வர்களும் தோற்றுகின்றனர்.

கொரோனாத் தொற்று காரணமாக தனிமைப் படுத்தல் நிலையங்களில் தங்கியுள்ள மாண வர்களுக்குத் தேர்வுக்கு தேவையான சகல வசதி களும் வழங்கப்பட்டுள்ளது. - ன்றார்.

# பதினைந்து வயதுவரை வாழ்ந்தாலும் வரலாற்றை பதிந்துவைத்த அன்னபிராங்



ஜேர்மனியின் பிராங்போர்ட் நகரில்1929 ஜுன்12இல் பிறந்தவள், அன்ன பிராங் என்றழைக்கப்படும் அன்னலீசி மேரி பிராங். எழுத்தாளராக வேண்டுமெனும் அவளின் இளவயதுக் கனவுக்குத் தடையாகவிருந்தது இரண்டாம் உலகப் போர். யூத இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், ஜேர்மனியில் அவர்களது குடும்பத்தின் இருப்பு நெருக்கடியாக நெதர்லாந்துக்கு இடம் பெயர்ந்தார்கள்.

நெதர்லாந்தில் குடியேறிய அன்ன பிராங்கின் குடும்பத்திற்கு அங்கே வாழும் சூழல் நெடுநாள் நீடிக்கவில்லை . நாசிப் படைகள் நெதர்லாந்தினைக் கைப்பற்ற, தந்தை ஆட்டோ பிராங், தன் வணிகச் செயலகக் கட்டடத்துடன் தொடர்புபட்டிருந்த இரகசிய அறையொன்றில் தனது குடும்பத்தை மறைத்து வைத்து கொள்கின்றார். அவர்களோடு அன்ன பிராங்கின் அத்தை குடும்பமும் அங்கு மறைந்து கொள்ள, சுமார் இரு வருடங்கள் நீடிக்கிறது அந்த மறைவு வாழ்க்கை.

உயிர்காத்துக் கொள்வதற்காக, தமக்குத் தாமே வைத்துக்கொண்ட சிறை தான் அந்த இரண்டாண்டுகள் மறைவு வாழ்க்கை. இந்தக்காலத்தில் முன்னொரு பொழுதில் தனக்குப் பரிசாகக் கிடைத்த நாட்குறிப்பொன்றில், அன்னா பிராங் தன் எண்ணங்களை எழுத்துக்களாக, பதிவு செய்கின்றாள். அப்போது அவளுக்கு வயது பதின்மூன்று.

அந்தப் பதிவுகள் அவர்களது மறைவு வாழ்க்கை மட்டுமல்லாது, இரண்டாம் உலகப்போரின் துயரினையும் இணைத்தே பதிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு எழுதப்பட்ட அவளது குறிப்புக்களை, அன்ன பிராங் குடும்பத்தின் மறைவு வாழ்க்கையின் போது அவர்களுக்கு உறுதுணையாய் இருந்த நெதர்லாந்துப் பெண்மணி மையீப் பின் அன்பின் வலிமையும், ஆழ்ந்த கவனிப்பும், அர்ப்பணிப்பான செயற்பாடும், பாதுகாத்து வைத்திருக்க, இரண்டாம் உலகப் போரின் முடிவின் பின்னதாக, நாசிப்படைகளின் சிறையிலிருந்து மீண்ட தந்தை அட்டோ பிராங்கிற்கு தன் மகளின் நினைவாகக் கிடைக்கிறது. அக் குறிப்புக்கள் "The Diary Of A Young Girl' எனும் புத்தகமாக 1947ல் வெளியிடப்பட்டது.

அவளது கனவு நனவாகியதை, அவளது எழுத்துக்கள் புத்தகமாக உருவாகியதை, பின்னாள்களில் எழுபது மொழிகளில் அப்புத்தகம் மொழிபெயர்க்கப்பட்டதை அன்னபிராங் அறிந்திருக்கவில்லை. அவள் குறிப்புக்கள் எழுதிய மறைவிடத்திலிருந்து 1945ல் நாசிப்படைகளிடம் காட்டிக் கொடுக்கப்பட அவளது குடும்ப உறுப்பினர்கள் தனித்தனியான வதை முகாம்களில் சிறைவைக்கப்பட்டனர். ஜேர்மனியின் பேர்கன் - பெல்சன் நாஜி வதை முகாமில் சிறைவைக்கப்பட்ட அன்ன பிராங், கடும் சித்திரவதைகளாலும், கொடிய நோயினாலும், 1945 மார்ச் மாதத்தில் உயிர் துறந்தாள். ஆனால் அவளது எண்ணம் இன்றளவும் உயிர்ப்புடன் உள்ளது.

நெதர்லாந்தின் கால்வாய் கரையருகே அமைந்துள்ள அந்த வீடு, அன்னபிராங்கின் நினைவு சொல்லும் அருங்காட்சியகமாக இப்போதும் இயங்குகிறது.

# எப்படியான மனிதர்களிடம் இருந்து நாம் விலகி இருக்க வேண்டும் தெரியுமா?



பொதுவாக தாமரை இலை நீர் போல அனைவரிடமும் பட்டும் படாமல் இருப்பது நல்லது. முக்கியமாக இவர்களிடம் கூடுதலாக விலகியே இருந்து விடுங்கள்

### அதிகம் புகழ்பவர்கள்

புகழ்வது நல்ல குணம் தான்.ஒருவருடைய நிறைகள் மற்றும் அவர்களுடைய நல்ல மாற்றங்களை கவனித்து புகழ்வது, அவர்களுடைய நல்ல குணம், பழக்கம் மற்றும் முயற்சி ஆகியவற்றை வளர்க்க துணைபுரியும்.

ஆனால் நம்மிடம் இல்லாததை இருப்பது போல புகழ்பவரிடம் கவனமாக இருக்க வேண்டும்.

'பூ மலர்வதை விட நீ மலர்வது அழகு' இப்படி யாராவது கூறினால் நாம் அழகாக சிரிக்கிறோம் என்று ஓரளவு ஒத்துக் கொள்ளலாம் 'ஆனால் யார் கூறியது உலகில் ஏழு அதிசயங்கள் உள்ளது என்று, என்னை கேட்டால் உலகின் ஒரே அதிசயம் நீ தான் என்பேன்' - இப்படி யாராவது புகழ்ந்தால் உஷாராகி விடுங்கள்.

### அதிக அமைதியானவர்கள்

அதிகமாக பேசுபவர்கள் தங்கள் குறித்த உண்மைகளை பேச்சில் வெளிப்படுத்தி விடுவார்கள். ஆனால் வார்தைகைளை அளந்து பேசுபவர்கள்.நாம் அவர்களை அறிந்து கொள்வதற்கு முன்னர் நம்முடைய பலவீனங் களை அறிந்திருப்பார்கள்.

அவர்களை எவ்வளவு தூரம் நம்பலாம் என்பதில் கவனமாக இருக்க வேண்டும்.

### தற்புகழ்ச்சி

நான் நல்லவன், நேர்மையானவன் என்று திரும்ப, திரும்ப கூறுபவர்களிடம் மிக கவனமாக இருக்க வேண்டும்.

இன்றய காலக்கட்டத்தில் 100 வீதம் நேர்மையாக, நல்லவர்களாக வாழ்வது கஷ்டம்.

ஒரு வேளை அப்படி இருந்தாலும் அவர்கள் நான் நல்லவன், நேர்மையானவன் என்று தன்னை தானே புகழ்ந்து கூற மாட்டார்கள், உண்மையில் வஞ்சக மனநிலை உள்ளவர்கள் தான் அவ்வாறு கூறுகிறார்கள்.

### துர்க்குணம்

சில, பல கெட்ட பழக்கங்கள் உள்ளவர்களை நாம் நம்பலாம். ஆனால் கீழே குறிப்பிட்டுள்ள கெட்ட குணங்கள் உள்ளவர்களுடன் விலகி இருப்பது நமக்கு நல்லது

- கோள் பேசுபவர்கள்.
- கூட இருந்து குழி பறிப்பவர்கள்.
- மூர்க்க குணம் உள்ளவர்கள்.
- உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்கள்.

பிறர் துன்பம் கண்டு மகிழ்பவர்கள் இவர்கள் அனைவரிடமும் மிக கவனமாக நடந்துகொள்ளுங்கள் - பேஸ்புக்ல கூட நண்பராக வைத்திருக்காதீர்கள்.

# ஒருவரை அதிகம் புண்படுத்தும் வார்த்தைகள்



கணவர் மனைவி இடையே - 'பிரிந்து விடலாமா ?' என்ற வார்த்தை எப்போது கேட்டாலும் 'எப்படி கேட்டாலும்' சில மாதங்களில் கேட்டாலும். பல வருடங்களில் கேட்டாலும் மிக கொடுமையான - துன்பம் தரும் - புண்படுத்தும் - வார்த்தைகளில் முதலாவது என்றே சொல்லலாம். உளவியல் ஆய்வுகளின் படி திருமண உறவில் இருந்து பிரியும் வலியே மிக மோசமானது.

இதன் அர்த்தம் - என்னை நம்பி வந்த நீ இல்லாமல் இருக்க என்னால் முடியும் போய்விடு என்ற புறக்கணிப்பு பெண்ணுக்கும், என்னை நம்பி வந்தேன் என்று சொல்லி பாதியில் தன்னந்தனியாக விட்டு செல்கிறாயே என்ற ஏமாற்றம் ஆண்களுக்கும் மிக கொடுமையே' முடிந்தவரை அன்புரிமையை எடுத்துக்கொண்டு வாழப் பழகுங்கள் .வாழ்க்கை மோசமானது அல்ல. அதுவே நாம் பிறந்த பெரும் பயன்.

வாழ்க்கை
தொகுப்பு - ப்ரியமதா பயஸ்



# நம் முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்கள் இல்லை!

அங்கே பார் நிலாவில் பாட்டி வடை சுடுகிறார் என்று நிலாவை காட்டி ,சோறு ஊட்டியவர்களும் முட்டாள்கள் இல்லை.

'என்ன நிலாவில் பாட்டி வடைசுடுவாரா? என்ன ஒரு முட்டாள் தனமான பேச்சு' என்று சிலர் சொல்லலாம், ஆனால் நிலாவில் ஔவை பாட்டி இருக்கிறாரோ இல்லையோ, அவரை சொல்லி ஒருவாய் சோறு ஊட்டுவதுதான் முக்கியம் என்றால், நிலாவுக்கு ஆம்ஸ்ட்ராங் முதலில் போகவில்லை, உன் அப்பாதான் கண்ணா முதலில் போனார் என்று பொய் சொன்னாலும் தவறில்லை.

இன்றைய காலத்தில் நம் மக்களோ கற்பனையிலும் கஞ்சபிசினாரிகள் தான். நிலவில் பாட்டி இருக்கிறார் என நிலாவுக்கு ஆம்ஸ்ட்ராங் போவதற்கு முன்னிருந்து சொல்கிறார்கள், ஒருமுறையாவது. அடுத்து நீ தான் நிலாவுக்கு போகப் போகிறாய் என்று சொல்லி பாருங்கள், வளர்ந்து நிச்சயம் ஒரு நாள் விண்ணை எட்டிவிடுவான் உங்கள் குழந்தை.

நல்ல விடயத்தை கண்மூடித்தனமாக பின்பற்றினாலும் அது நல்லதையே விளைவிக்கும். கெட்டதை தெரியாத்தனமாக செய்தாலும் அது கெட்டதையே விளைவிக்கும். ஆராய்ந்து செயல்படுங்கள் நிச்சயம் நாம் வெற்றி பெறுவோம்.

காலைக்கதிர் Kalaikkathir

# நம் சமூகத்தில் தேடல் உள்ளவர்கள்தான் மாற்றத்தின் முகவர்களாக மாற வேண்டும்

## இயூஜின் பிரான்சிஸ் அடிகள் வலியுறுத்து

கியூடெக் கரித்தாஸ் சர்வமத சகவாழ்வு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஊடகவியலாளருக்கான கருத்தமர்வு கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகள் தலைமையில் நடைபெற்றது. மேற்படி கருத்தமர்வில் ‘சமயங்களுக்கிடையிலான மற்றும் சமூகங்களுக்கிடையிலான சமாதான நல்லுறவு வலுவூட்டலில் ஊடகவியலாளரின் பங்கு’ எனும் தலைப்பில் ஊடகவியலாளர் நிலாந்தன் சிறப்புரையாற்றினார்.

ஊடகவியலாளர் நிலாந்தன் தனது சிறப்புரையில் – நல்லிணக்கத்தை யாரோடு யார் மேற்கொள்ள வேண்டும் என்பதைத் தீர்மானிக்காது நல்லிணக்கத்ததை அடைய முடியாது. முரண்பட்ட மனிதர்கள், குடும்பங்கள், சமூகங்கள், இனங்களிடத்தில் நல்லிணக்கம் ஏற்படுவதில் உள்ள ஆர்வம் அதனை முன்னெடுப்பதில் முரண்பாடற்ற இனம் காணப்படல் மிக முக்கியமானது. சமநிலைத்தன்மையுடன் முன்னெடுப்பதாலேதான் இவை சாத்தியமாகும் என்பதை ஏற்றுக் கொண்டு



செயல்படுத்தலே நல்லிணக்க இலக்கை அடைய வழியாகும்.

இதற்குத் தடையாகப் பலமுனைதாக்கங்கள் ஏற்படலாம். அதில் ஒன்றுதான் ஊடகங்களாகும்.

ஊடகவியலாளர்கள் விழிப்புடன் சமூகத்தை வழிப்படுத்தும் பொறுப்புமிக்கவர்கள் என்ற மனநிலையுடன் விமர்சனமாக சிந்திப்பவராகவும் தேடல்மிக்கவராகவும் தம்மை தயார்படுத்தினால்தான் சிறந்த ஊடகப் பணிகளை ஆற்றமுடியும். மாற்றத்தின் முகவர்களே ஊடகவியலாளர்கள என்ற மனப்பாங்குடன் சமூகத்தை மாற்றத்தின் நிலைக்கு ஏற்ப சமூக வலைத்தளங்களை திசைமாற்றி செல்லாது அறிவுசார்ந்த – நல்லிணக்கம் சார்ந்த – நிலையில் வழிகாட்ட வேண்டிய பொறுப்பு சிறந்த ஊடகவியலாளருக்கே உண்டு. அதன வெளிப்படுத்தும் மாற்றத்தின் முகவர்களாக ஊடகவியலாளர் தம்மை உருவாகி உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாகும். – என்றார்.

கியூடெக் கரித்தாஸ் நிறுவன இயக்குநர் எஸ். இயூஜின் பிரான்சிஸ் அடிகள் உரையாற்றுகையில் –

மக்களை வழிகாட்டும் ஊடகங்கள் தம் பொறுப்புக்களை உணர்ந்து சர்வமத நல்லுறவை வலுப்படுத்தும் நல்லிணக்க சிந்தனைகள் வலுவூட்ட வேண்டும். அந்த வழிகளில் செயல்படவே ஊடகவியலாளருடனான சந்திப்புக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி வருகின்றோம். ஊடகத்துறையில் முன்னேற பல்கலைக்கழகத்தில் கற்று வரும் புதிய தலைமுறையினருக்கு இக்கருத்தமர்வு மிகமுக்கிய வழிகாட்டலாக அமையும். இதுபோன்று தேடல் உள்ளவர்கள் தான் மாற்றத்தின் முகவர்களாக மாற வேண்டும். –என்றார்.

முன்னாள் கல்விப்பணிப்பாளர் வல்வை அனந்தராஜா கருத்துக் கூறுகையில் –

அறிவு சார்ந்த தேடலுடன் வாசிப்பு பழக்கங்களைத் தூண்டினால் துலங்கலாம். நூல்களை வாங்குவதுடன் மட்டுமல்ல உண்மை நிலைகளை வெளிப்படுத்துவதிலும் ஊடகவியலாளரின் பார்வைகள் மிளிர வேண்டும். – என்றார்.

காலைக்கதிர்
Kalaikathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி – யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்

## கொடிய கொரோனோ ஆதிக்கத்தில் அகப்பட்டோர் செபிப்பதற்குரிய செபம்

கனடா மொன்றியலில் வசிக்கும் அல்பிறட் ஞான ராஜா அவர்கள் கொடிய கொரோனோ ஆதிக்கத்தில் அகப்பட்டுள்ளவர்கள் செபிப்பதற்கு பொருத்தமான செபம் ஒன்றை அருட்சகோதரி டொறின் அவர்கள் மூலமாக பெற்று, ஆங்கில மொழியில் இருந்து தமிழாக்கம் செய்து, அனைவரும் பயனடைய அனுப்பி வைத்துள்ளார். அதனைப் பலரும் செபித்துப் பயன டைய இங்கே தருகிறோம்.

மாசில்லாத் தாயாரே! ஆசீர்வதிக்கப்பட்ட அன்பின் சரணாலயமே! உம்மை நோக்கிக் கதறியழும் எமது வேண்டுதல்களைக் கேட்டருளும். நோய்களின் அவ லம் மனித குலத்தை அச்சுறுத்துகிற இவ்வேளையில் உங்களது தாய்மையின் பரிந்துரையை நாங்கள் வேண்டி நிற்கிறோம். உமது உதவியைக் கேட்டு தாழ்ச்சியோடு வருவோ ரின் உண்மையுள்ள பாதுகாவலியான தாயே! உங்களுக்குச் சொந்தமானவர்களுக்கு ஏற்படும் இந்தத் தீமைகளை எதிர்த்து போரிட விண்ணகத் தூதர்களை அனுப்புமாறு பரம திரித்துவத்தை மன்றாடும்.

உமது பரிசுத்த மேலாடை உம்மை நம்பும் பிள்ளைகள் அனைவருக்கும் கவசமாகவும் கேடயமாகவும் தங்கு ல்மிடமாகவும் அமைவதாக. இதனால் நாங்கள் வசிக் கும் நகரங்கள், எமது வதிவிடங்கள் அனைத்தும் விண்ணக தெய்வீக பாதுகாப்பால் முத்திரை இடப்படுவதாக.

மாசற்ற தாயாரே! தங்களது இப்பெரிய உதவிக்காக நாங்கள் உமக்கு நன்றி கூறுகிறோம். இந்தக் கண் ணீர்க் கணவாயில் எங்களைக் கைநெகிழ விடாதீர்கள்.

ஒருமித்த குரலில் கூக்குரலிடும் எமக்கு, நீரே கேட யமும், தங்குமிடமும், வழிகாட்டியுமாக இருந்தரு ளுங்கள் – ஆமென். பாவ மாசில்லாமல் உற்பவித்த அதி தூய மரியே எங்களுக்காக மன்றாடும்!

## குருத்துவ வாழ்வில் 40 ஆண்டுகளை நிறைவு செய்யும் ஸ்ரிபன் அடிகளார்







செபமாலைத் தாசர் சபையைச் சேர்ந்த ஏ. ஸ்ரிபன் அடிகளாரின் குருத்துவ வாழ்வின் 40ஆவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் 07 ஒக்ரோபர் 2020அன்று கோவில் வீதியில் அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் நடைபெற்றது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவேல் பர்ணாண்டோ ஆண்டகை உட்பட பலரும் மேற்படி விழாவில் கலந்து சிறப்பித்தனர். ஏ.ஸ்ரிபன் அடிகளாரின் பணி எவ்வாறு அமைந்தது என்பதை நோக்குவோம்:-

05.07.1952 – பிறப்பு நாவாந்துறை ,கல்வி புனித பத்திரிசியார் கல்லூரி

16.07.1972 – யாழ்ப்பாணம் செபமாலைத்தாசர் சபையில் இணைவு

1973 பெப்பிரவரி – தோலகட்டி ஆச்சிரமத்தில் விண்ணப்பநிலைப் பயிற்சி

1973 ஆகஸ்ட் – இத்தியாவிற்குத் துறவுப்பயிற்சி

02.1975 – துறவு வாழ்வின் முதல் அர்ப்பணம்

15.06.1975 – மெய்யியல் கல்வி – பெங்களூர், இந்தியா

15.06.1977 – இறையியல்க் கல்வி – பெங்களூர், இந்தியா

01.05.1980 – குருப்பட்டம், யாழ் பேராலயம், ஆயர் வ.தியோகுப்பிள்ளை ஆண்டகை

198 – உருவாக்கல் பயிற்சி – பூனே, இந்தியா

1981 – உப அதிபர், தோலகட்டி ஆச்சிரமம்

1982 – 1988 – அதிபர், தோலகட்டி ஆச்சிரமம்

1988 – 1990 – அதிபர், அருள் ஆச்சிரமம் யாழ்ப்பாணம்

1990 - 1994 – அதிபர், நவத்துறவு ஆசிரியர் அமைப்பு – திருச்சி, மணப்பாறை, இந்தியா

1994 - 1995 – அதிபர், அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்

1995 – இடம்பெயர்வு,மிருசுவில் மடு

1996 – வவுனியாவில் புதிய மடம் ஆரம்பம்

1996 – 2000 – அதிபர், வவுனியா ஆச்சிரமம்

2000 – 2006 – மாகாண முதல்வர், நீர்கொழும்பு

2006 – 2012 – செபமாலைத்தாசர் சபையின் உயர் தலைவர் – பெங்களூர், இந்தியா

2012 - 2015 – அதிபர், அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்

2015 - 2017 – கண்டி குருத்துவ மாணவர் இல்லம்

2017 – 2020 செபமாலைத்தாசர் சபை மாகாண முதல் ஆலோசகர், மிருசுவில்.

ஏ.ஸ்ரிபன் அடிகளாரே! தொடருங்கள் தங்கள் பணியை. இறைவன் என்றும் துணை நிற்பார். தங்களின் குருத்துவப்பணி மேலும் சிறக்க காலைக்கதிர் அன்பு நெஞ்சங்களின் வாழ்த்துக்கள்.

## கொரோனாத் தொற்றுக்கு இடையே மக்கள் பணி இந்திய கரித்தாஸ் நிறுவனத்திற்கு உயரிய விருது

இந்தியாவில் பணியாற்றும் கரித்தாஸ் நிறுவனம் இவ் வாண்டில் மிகச்சிறந்த நலப்பணிகளை ஆற்றிய நிறுவனம் என்ற விருதை இந்திய நடுவண் அரசிடமிருந்து, ஒக்டோபர் 02 காந்தி பிறந்த நாளன்று பெற்றுள்ளது.

இந்தியாவில் பெருமளவு பரவியுள்ள கொவிட் – 19 கொள் ளைநோயின் தாக்கத்திலிருந்து மக்களைக் காப்பதற்கு இந்திய கரித்தாஸ் நிறுவனம் மிகச் சிறந்த பணியாற்றியுள்ளது என இந்திய நடுவண் அரசின் நலத்துறை மற்றும் குடும்பநல அமைச்சர் வர்தன் கூறியுள்ளார்.

ஒக்டோபர் 2ஆம் திகதி நடைபெற்ற மெய் நிகர் வடிவ இணையத்தள விழாவில் வழங்கப்பட்ட இந்த விருதை,




இந்திய காரித்தாஸ் நிறுவனத்தின் இயக்குனர் பால் மூஞ்செலி அடிகளார் பெற்றுக்கொண்டார்.

கொவிட் – 19 கொள்ளைநோய் உருவாக்கியுள்ள ஆபத்துக்களைப் புறந்தள்ளி, தங்கள் சொந்த நலன் களையும் மறந்து, காரித்தாஸ் நிறுவனத்தின் சார்பில் பணியாற்றிய நலப்பணி யாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் அனைவருக்கும் இந்த விருதை சமர்ப்பிப்பதாக மூஞ்செலி அடிகள் கூறினார்.

1962ஆம் ஆண்டு ஒக்டோபர் 2ஆம் திகதி காந்தி பிறந்த நாளன்று நிறுவப்பட்ட இந்திய காரித்தாஸ் நிறுவனம், அதே அக்டோபர் 2ஆம் திகதி இந்த விருதைப் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா பழைய பஸ் நிலையத்தில் தொற்று நீக்கி மருந்துகள் தெளித்தல்





நாடளாவிய ரீதியில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருகின்ற நிலையில் வவுனியாவில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் வன்னி இராணுவத் தலைமையகத்தால் தொற்று நீக்கும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்களின் நடமாட்டம் அதிகளவில் காணப்படும் பகுதியான வவுனியா பழைய பஸ் நிலையத்தில்நேற்று தொற்று நீக்கும் நடவடிக்கை இடம்பெற்றது.

பழைய பஸ் நிலையத்தைச் சூழவுள்ள வர்த்தக நிலையங்களுக்கு முன்பாகவும் மற்றும் நடைபாதைகள் போன்றவற்றிலும் இராணுவத்தினரால் தொற்று நீக்கி மருந்துகள் தெளிக்கப்பட்டன. (100)

# கொரோனாவின் 2 ஆம் அலையை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எவையையும் எடுக்கவில்லை

## பாலித ரங்கே பண்டார தெரிவிப்பு

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலையைக் கட்டுப்படுத்திய அரசாங்கம் இரண்டாம் அலையை எதிர்கொள்வதற்கான தயார்ப்படுத்தல்கள் எதனையும் செய்யவில்லை என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித ரங்கே பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், அதன் விளைவையே தற்போது மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் எனக் குறிப்பிட்டார்.

இந்த ஊடக சந்திப்பில் பாலித ரங்கே பண்டார மேலும் கூறியுள்ளவை வருமாறு –

உலகலாவிய ரீதியில் கொவிட் – 19 கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாம் அலையொன்று ஏற்படுவதற்கான வாய்ப்பு இருப்பதாகவும், அதன் விளைவாக இலங்கையும் நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டியேற்படலாம் என்றும் கடந்த ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்தார்.

அது மாத்திரமன்றி முகக்கவசங்களையும் செயற்கை சுவாசக்கருவிகளையும் எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது தொடர்பாகவும் ஐ.டி.எச்.வைத்தியசாலையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக மேலதிகமாக ஒரு பிரிவை ஆரம்பிப்பது தொடர்பாகவும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

எனினும் அவர் கூறிய விடயங்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியதா என்பது தற்போது



மிகமுக்கிய கேள்வியாக மாறியிருக்கிறது.

ஏனென்றால் எமது நாடு கொரோனா வைரஸ் பரவலின் முதலாவது அலைக்கு முகங்கொடுத்தமையோடு அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார மற்றும் பாதுகாப்புப் பிரிவுகள் ஒன்றிணைந்து செயலாற்றின.

அதில் அடைந்துகொண்ட வெற்றியைப் பயன்படுத்தி, நாட்டுமக்கள் மத்தியிலும் சர்வதேசத்தின் மத்தியிலும் அரசாங்கம் தமது பெருமையைப் பறைசாற்ற முயற்சித்ததே தவிர, வைரஸ் பரவலின் இரண்டாம் அலை ஏற்படும் பட்சத்தில் அதனைக் கையாள்வதற்கான தயார்ப்படுத்தலைச் செய்யவில்லை என்பதை தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைவரங்களின் ஊடாகப் புரிந்துகொள்ள முடிகின்றது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.




## லக்ஷ்மி நாராயணா திருமண சேவை

இல:- 266 பலாலி வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

தொ.பே. 077 197 1667
077 3164 796

### மணமகன் விவரம்

பிறந்த திகதி – 1987.09. 18 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் –பூசம்
கி.பா – 29 5'8" செவ் – 10 இல்
தகைமை – B.sc, M.sc தொழில் – Newzaland PR
எதிர்பார்ப்பு – விஞ்ஞான பட்டதாரி, Newzaland, இலங்கை பெண்.

பிறந்த திகதி – 1992.03.29 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருகோணம்
கி.பா – 59 செவ் – 8 இல்
தகைமை – NDQ தொழில் – விவசாய போதனாசிரியர்
எதிர்பார்ப்பு – பட்டதாரி அரச சேவை மணமகள் தேவை

பிறந்த திகதி –1990.05.17 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – திருகோணம் (4)
கி.பா – 27 செவ் – 12 இல்
தகைமை – Cima Final தொழில் – Newzaland Work
எதிர்பார்ப்பு – Newzaland, இலங்கை விஞ்ஞான பட்டதாரி மணமகள்.

பிறந்த திகதி – 1985.06.24 மதம் – இந்து
ஜாதி – விஸ்வகுலம் நட்சத்திரம் – பூரம்
கி.பா – 24 சூரி/ செவ் – 10 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – விஞ்ஞான பட்டதாரி அரச சேவை மணமகள். (விஸ்வகுலம்)

பிறந்த திகதி – 1989.06.27 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – ரேவதி (2)
கி.பா – 74 செவ் – 1 இல்
தகைமை –Network Engineer தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – விஞ்ஞான பட்டதாரி கொழும்பு + வெளிநாடு மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1985.09.02 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – ரேவதி (2)
கி.பா – 53 செவ் / சூரி – 7 இல்
தகைமை – HN DA தொழில் – DO அரச சேவை
எதிர்பார்ப்பு – அரச சேவை + தனியார் மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1993.03.09 மதம் – இந்து
ஜாதி – விஸ்வகுலம் நட்சத்திரம் – உத்தரம் (4)
கி.பா – 23 செவ் – 11 இல்
தகைமை – Civil Engineer தொழில் –கட்டிட ஒப்பந்த வேலை
எதிர்பார்ப்பு – அரச சேவை + தனியார் மணமகள் தேவை.

பிறந்த திகதி – 1991.08.20 மதம் – இந்து
ஜாதி – V ஆண் நட்சத்திரம் – மூலம் (2)
கி.பா – 16 செவ்/ சூரி – 11 இல்
தகைமை – B. sc Civil Engineer
தொழில் – அரச சேவை கொழும்பு
எதிர்பார்ப்பு – Engineer, Doctor கொழும்பில் வேலை செய்பவர் (சூரி/ செவ் குறிப்பு தேவை)

### மணமகள் விவரம்

பிறந்த திகதி – 1990.06.14 மதம் – இந்து
ஜாதி –V பெண் நட்சத்திரம் – சதயம்
கி.பா – 31 செவ் – 3இல்
தகைமை – B.SC தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – Engineer, விஞ்ஞான பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1991.10.03 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பூசம்
கி.பா – 14 செவ் / சூரி – 10 இல்
தகைமை – B.sc Software Engineer
தொழில் – Company Colombo
எதிர்பார்ப்பு – விஞ்ஞான பட்டதாரி, Engineer மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1989.09.30 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – அத்தம்
கி.பா – 24 (விவாகரத்து) செவ்/ சூரி – 2 இல்
தகைமை – G.C.E A/L 5'2" தொழில் – UK PR
எதிர்பார்ப்பு – UK யில் உள்ள விவாகரத்துள்ளவர்களும் சூரி/ செவ் மணமகன் தேவை. UK PR இல்லாதவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

பிறந்த திகதி – 1991.04.16 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – பரணி (2)
கி.பா – 22 5'6" செவ் – 2 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Engineer, Doctor மணமகன் தேவை

பிறந்த திகதி – 1994.09.29 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – புனர்பூசம் (4)
கி.பா – 58 செவ் – 8 இல்
தகைமை – Accountant தொழில் – Accountant (UK PR)
எதிர்பார்ப்பு – UK, பட்டதாரி மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1992.11.23 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – விசாகம் (1)
கி.பா – 63 செவ் – 7 இல்
தகைமை – கல்வியல் கல்லூரி
தொழில் – ஆசிரியர்
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை.

பிறந்த திகதி – 1990.12.08 மதம் – இந்து
ஜாதி – V பெண் நட்சத்திரம் – மகம்
கி.பா – 24 செவ் – 8 இல்
தகைமை – M.B.B.S தொழில் – Doctor
எதிர்பார்ப்பு – Doctor, Engineer, Accountant, விரிவுரையாளர்

பிறந்த திகதி – 1983.02.01 மதம் – இந்து
ஜாதி – N பகுதி பெண் நட்சத்திரம் – உத்தரம் (1)
கி.பா – 52 செவ் – 1 இல்
தகைமை – HN DA தொழில் – Managerment Assistant
எதிர்பார்ப்பு – அரச சேவை மணமகன் தேவை.

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.**

**காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000**

# மாரவில பகுதி மீனவருக்குக் கொரோனா மீன்வள துறைமுகத்தை மூட நடவடிக்கை!

மாரவில பகுதியைச் சேர்ந்த மீனவர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனால் டிகோவிட்ட மீன்வள துறைமுகத்தை மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கடந்த 8 ஆம் திகதி அந்த மீனவர், தொழிலுக்காகக் கடலுக்குச் சென்றுள்ளார். இதன்போது, அவருடன் 5 மீனவர்கள் படகில் இருந்துள்ளனர்.

மீனவருக்கு காய்ச்சல் அறிகுறி காணப்பட்டமையால், ராகம வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

இதன்போது, அவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளதா என்ற பீ.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆந்த பீ.சி.ஆர். பரிசோதனையின் முடிவு நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்டபோதே, மீனவருக்கு கொரோனா வைரஸ் தொற்று உள்ளமை அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதிக்கு...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தின் முழுப் பதவிக் காலமான ஐந்து வருடத்தில் அரைவாசியாக – இரண்டரை வருடங்களாக – மாற்றினால் அதனை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்றி சட்ட மாக்கலாம் என நீதிமன்றம் இப்போது தீர்மானித்துள்ளது.

### சரத்து 22

இது சுதந்திரத் தேர்தல் ஆணையத்தின் அதிகாரத்தைப் பற்றிக் குறிப்பது.

தேர்தல் அறிவிக்கப்பட்டால், அரச நிர்வாகத்தின் பல மட்டங்கள் மீதான நியாயாதிக்கம் தேர்தல் ஆணையத்தின் கீழ் வரும் என 19ஆவது திருத்தம் தெரிவித்திருந்தது. அதனை நீக்குவது பற்றிய விடயமே 22 சரத்தாக இருபதாவது திருத்தத் தில் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதை அங்கீகரிக்க உயர்நீதிமன்றம் மறுத்து விட்டது. இதனைச் செய்வதாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெற வேண்டும் என்று நீதிமன்றம் இன்று உத்தரவிட்டு விட்டது.

### ஏனையவற்றுக்கு அனுமதி

இரட்மைக் குடியுரிமை பெற்றோர் நாடாளுமன்றுக்குத் தெரிவு செய்ய இடமளிக்கும் ஏற்பாடுகள் உட்பட இருபதாவது திருத்தத்தின் ஏனைய சரத்துக்களை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும் என உயர்நீதிமன்றத்தின் இந்த முடிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதிக்கு சட்ட விலக்களிப்பு வழங்கவும் –

தேர்தல் ஆணையத்தின் அதிகாரங்கள் சிலவற்றை விலக்கவும் –

அனுமதி வழங்குவதற்கு உயர்நீதிமன்றம் மறுத்திருப்பதும், அதைச் செய்வ தாயின் சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதி பெறப்பட வேண்டும் என்று உயர்நீதிமன்றம் கூறியிருப்பதும் முக்கிய விடயங்கள் என உயர் சட்டவட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

HIKVISION Mega Store
No.1 Worldwide CCTV and Video Surveillance
ஹிக் விஷன் மெகா ஸ்ரோர்
வடமாகாண பிரதான நிறுவுநர் மற்றும் காட்சியாளர்
(Main Show Room in Northern Province)
உங்கள் வீடுகள், அலுவலகங்கள், வங்கிகள், கோயில்கள் மற்றும் பொதுப் பராமரிப்பு நிலையங்களின் பாதுகாப்பினை சிறந்த முறையில் கண்காணிப்பை உறுதி செய்வதற்கு, குறித்த தவணையில் நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் பொருத்தித்தரப்படும்.
நம்பகத் தரமான முதற் தர சீ.சீ.ரிவி கமராக்கள் மற்றும் உதிரிப்பாகங்களை இங்கு பெற்றுக் கொள்ளலாம்
HIKVISION
Hot Line -021 222 7126
077 473 6057
077 2871 841
077 899 2923
இல - 164, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
164, Palaly Road, Thirunelvely, Jaffna
hikvisionmegastore@gmail.com

# கொரோனா தொடர்பில் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை!

## தொற்று நோயியல் பிரிவின் பிரதானி மருத்துவர் சுதத் சமரவீர

கொரோனா வைரஸ் தொற்றுதொடர்பாகநாட்டில் தற்பொழுது ஏற்பட்டுள்ள நிலைமைகள் தொடர்பாகவும் மக்கள் பதற்றமடையத் தேவையில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

தொற்று நோயியல் பிரிவின் பிரதானி மருத்துவர் சுதத் சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில், தொற்றாளர்கள் கொத்தணி தற்பொழுது குறைவடைந்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும், மக்கள் உரிய சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி செயற்பட வேண்டியது மிகவும் அவசியமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



வைத்தியசாலை முறையில் நோயாளிகள் பதிவாகி வருகின்றனர் எனவும் சமூகத் தொற்றாக மாறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மினுவாங்கொட ஆடைத்தொழிற்சாலையில் தொற்றாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்து செல்கின்றமையால் மக்கள் இது தொடர்பாகப் பீதியடைந்துள்ளனர் எனவும் எவ்வாறெனினும், நோய் தொற்று சமூகத்துக்குப் பரவுவதைத் தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் மருத்துவர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

# கொரோனா தொற்று தடுப்புக்கு விசேட வர்த்தமானி வெளியீடு?

கொழும்பு, ஒக்.11

கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்று விரைவில் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

கொரோனா நோய்த் தொற்று தடுப்பிற்கு பொதுமக்கள் போதியளவு ஒத்துழைப்பு வழங்காத காரணத்தால் இவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த சில தினங்களாக இலங்கையில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1025/=Kg
•பிரான்ஸ் •ஜெர்மனி
•டென்மார்க்
•நெதர்லாந்து
•இத்தாலி
•சுவிஸ்
1150/= Kg
0768226240

A/L தொழில்நுட்பப் பிரிவு
S.Shakthy B.Sc(Hons), M.Sc
T.P - 077 170 3549
076 170 3542
ZOOM ONLINE CLASSES
இலவச வகுப்புகள்
A/L 2022
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
விசை
திங்கள் முதல் வெள்ளி வரை 7.30 - 8.30 pm
Meeting ID - 509 028 7747
Passcode - TWSFT2020
A/L 2022 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

A/L தொழில்நுட்பப் பிரிவு
S.Shakthy B.Sc(Hons), M.Sc
T.P - 077 170 3549
076 170 3542
ZOOM ONLINE CLASSES
இலவச வகுப்புகள்
A/L 2021
தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம்
தரம் 12 இற்கான SFT பாடங்களின் Revision and Past Paper Discussion
திங்கள் முதல் வெள்ளி வரை 5.00 - 6.00 am
Meeting ID - 509 028 7747
Passcode - TWSFT2020
A/L 2021 பிரிவைச் சேர்ந்த எவரும் பங்குபற்றலாம்.

லக்ஸ்மி திருமண சேவை
எம்மிடம் எல்லா சமூகத்தினருக்குமான ஜாதக குறிப்புகளும், உள்நாடு, வெளிநாடு மற்றும் அரச தனியார் ஊழியர்களுக்குமான குறிப்புகளும் உண்டு.
குறிப்பு:- "திருமண ஜாதக பதிவுகள் இலவசம்.
தொடர்பு:- 077 846 1976
கே.கே.எஸ் வீதி, கோண்டாவில், மேற்கு கோண்டாவில்.

BRRENS FASHION PLANET Signature Reborn
பிறென்ஸ் பஷன் பிளானட்
ஆண்கள், பெண்களுக்கான அனைத்து ரெடிமேட் ஆடைகள்
075 527 9110
077 332 1937
021 2221 2777
Fb. Brrens Fashion Planet
Email . brensfashionplanet@gmail.com
சிவன் கோவில் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை
மணமகன் விவரம்
பிறந்த திகதி – 1985.08.05
மதம் – இந்து V
நட்சத்திரம் – உத்திரட்டாதி
பாவம் – 13
செவ்வாய்/சூரி – 6 இல்
கல்வி – Q.s மொரட்டுவ
தொழில் – Q.s Engineer
எதிர்பார்ப்பு – பட்டதாரி, அழகான பெண் தேவை
மணமகள் விவரம்
பிறந்த திகதி – 1974.08.05
மதம் – இந்து V
நட்சத்திரம் – சதயம் 3
பாவம் – 57
செவ்வாய் – 8 இல்
கல்வி – பட்டதாரி
தொழில் – ஆசிரியை
எதிர்பார்ப்பு – கடை, தோட்டம்
Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப்படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும்.
பதிவுக் கட்டணம் 1000 + 300
உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை
பிரான்ஸ் - ரூ.1500/ ரூ.1300
ஜேர்மனி - ரூ.1500/ ரூ.1300
டென்மார்க் - ரூ.1500/ ரூ.1300
ஹொலண்ட் - ரூ.1500/ ரூ.1300
பெல்ஜியம் - ரூ.1500 / ரூ.1300
இத்தாலி - ரூ.1650/ ரூ.1400
லண்டன் - ரூ.1600/ ரூ.1150
070 330 5500
075 330 5500
076 122 1566
இந்தியா – டுபாய் – சைனா நாடுகளில் பொருட்களை விரைவாக பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ள (துணிப்பொருட்கள் தவிர)

எந்த சூழ்நிலையிலும் மனதை தளரவிடாதீர்கள் உங்கள் துயரங்களை எம்மிடம் பகிர்ந்து கொள்ளுங்கள்.
STOP SUICIDE
"உங்களுக்காக நாம்"
கை கொடுக்கும் நண்பர்கள்
ஸ்ரீ லங்கா சுமித்ரயோ யாழ்ப்பாணக் கிளை
Sri Lanka Sumithrayo Jaffna Branch
இலவச சேவை FREE SERVICE
077 900 8776
இல.175, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
அலுவலக நேரம்:- 9 மு.ப. - 1 பி.ப

northern PC PARK
வடக்கின் கணினிப் பூங்கா
10, Muddaskadai Junction Stanley Road, Jaffna
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 257 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line - 077 777 1545

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 11.10.2020 இல் வெளியிடப்பெற்றது.